விடுதலைப்புலிகள்

குரல்: 84 ஆனி - ஆடி, 1998 அன்பளிப்பு: 5/-

இல ______

அரசியல் துறை

உள்ளே

- சந்திரிகா அரசாங்கத்தின் கையறுநிலை
- மனங்களை வெல்லும் தந்திரங்களும் மக்களை அடிமைகொள்ளும் சூழ்ச்சிகளும்
- அம்பாறை - கிளிநொச்சி சண்டைகள்
- சாந்த மீண்டும் நிறும் வாழ்வு
- கரும்புலிகள்
- பழிகொலைத் தீ - முள்வேலி சிரசம்
- உலைக்களம்
- ஒரு நாள்

உட்கட்சிப்பூசலுக்குள் அரசாங்கம் நெருக்கடிக்குள் ஜயசிக்குறுய்

போர்முயற்சியில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையாலும் - விரைவில் காலியாகப்போகும் பிரதமர் பதவியை நிரப்புவது தொடர்பாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினுள் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

போரைமுடித்துவிட்டு தேர்தலை நடாத்த வேண்டும் என ரத்வத்தவும் - போரும் தேர்தலும் ஒருங்கே நடைபெற வேண்டுமென சந்திரிகா அம்மையாரும் - அண்மையில் - சச்சரவுபட்டுக்கொண்டது தெரிந்ததே.

போரை விரைவாக முடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இராணுவம்-கடற்படை - வான்படையென முப்படைகளுக்கும் பொறுப்பாக ஒரு பிரதான அதிகாரியைத் தளபதியை நியமித்து, போரை விரைவுபடுத்த அம்மையார் திட்டமிட்டுள்ளதாக 'சண்டேரைம்ஸ்' ஏடு கூறியுள்ளது. இந்த நியமனத்திட்டம், ரத்வத்தவின் போர் நெறிப்படுத்தலில் அம்மையாருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி நிலையே காட்டுகின்றது. சந்திரிகா-ரத்வத்த உறவில ஏற்பட்டுவரும் விரிசலுக்கு உதாரணங்களாக, இவற்றை செய்தியாளர்கள் காட்டுகின்றனர்.

இதேசமயம், தான்வகிக்கும் பிரதமர்பதவியை தனதுமகன் அனுரா பண்டாரநாயக்காவுக்கு வழங்க, சிறிமாவோ அம்மையார் விரும்புவதாக செய்திகள் கூறுகின்றன. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியிலிருந்தபடி பொ. ஐ. முன்னணி அரசாங்கத்தை காட்டமாகக் கண்டித்துப், பிரச்சாரம் செய்தவர் அனுரா என்பதால், அவரை தமது பிரதமராக ஏற்கும் நிலையில அனேக அரசாங்கப்பிரமுகர்கள் இல்லை என்றும் கூறப்படுகின்றது. எனினும், ரத்வத்தவுடனான உறவில் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை காரணமாகவும் - தாயின் இறுதி ஆசையை நிறைவேற்றவேண்டும் என்ற விருப்பு காரணமாகவும் அனுராவை பிரதமராக்குவது தொடர்பாக சந்திரிகாவும் சிந்திப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

ஆனால், சிறிமாவுக்குப் பின்னர் பிரதமர் பதவியானது ரத்வத்தவுக்கே வழங்கப்படவேண்டும் என்று சிங்களத்து அரசியலில் சக்திமிக்க நபரான மல்வத்த மகாநாயக்கதேரர் பகிரங்கமாகவே அபிப்பிராயம் கூறியுள்ளார்.

மகாநாயக்கர் மற்றும் சக்திமிக்க சில பௌத்தபிக்குகள் உட்பட முக்கிய அரசாங்க பிரமுகர்களை தனது இல்லத்திற்கு அழைத்த ரத்வத்த, அவர்களுக்கு விருந்தளித்து ஆதரவு கோரியதாக கொழும்புச்செய்திகள் கூறுகின்றன. இந்தப் பிரமுகர்களுக்கூடாக சந்திரிகா அம்மையாருக்கு அழுத்தங்கொடுத்து பிரதமர் பதவியைக் கைப்பற்ற, ரத்வத்த முயல்வதாகவும் தெரிகின்றது.

இத்தகைய உட்பூசலுக்குள் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் சிக்குண்டுள்ள இதேவேளை, வன்னிச்சமர்முனையில் ஜயசிக்குறுய் படையினர் நகரமுடியாது முடங்கிப்போயுள்ளனர்.

பதினைந்து மாதகாலமாக நடைபெறும் ஜயசிக்குறுய் சமரில் - கடந்த ஒன்பது மாதங்களாக - மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான சண்டைகளிலேயே ஜயசிக்குறுய் படையினர் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய நீண்டகால சண்டைகளை நடாத்தியும் மாங்குளத்தை நெருங்கமுடியாது படையினர் திண்டாடுகின்றனர்.

மாங்குள சண்டையரங்கம் நாற்பது கிலோ மீற்றர்கள் நீள முன்னரங்கநிலைகளைக் (F. D. L.) கொண்ட பரந்த மரபுவழிச்சமரரங்கமாக இப்போது விரிவடைந்துள்ளது. ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து வவுனிக்குளம் பகுதிவரை இந்த சண்டையரங்கம் பரந்துள்ளது.

மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக பல்வேறு தந்திரோபாயத் தாக்குதல் திட்டங்களை படைத்தலைமை பயன்படுத்திப் பார்த்துள்ளது. தோல்வியே பதிலாகக் கிடைத்துள்ளது.

மாங்குளத்தை நோக்கி சந்தடியற்ற கெரில்லா நகர்வு என்றும் - புலிகளின் முன்னரங்குகளை பகிரங்கமாக உடைத்துத்தள்ளியபடி - புல்டோசர் பாணியிலான - மரபுவழி நகர்வுமுறைகள் என்றும் பல தாக்குதல் திட்டங்களை பயன்படுத்திவிட்டது. ஒவ்வொரு முயற்சியும் படையினர்க்கு பலத்த இழப்புகளையே ஏற்படுத்தியுள்ளதுடன் - முயற்சிகளில் தோல்வியும் கண்டுள்ளது.

மாங்குளம் - கிளிநொச்சி என வன்னியின் இரண்டு சமர்முனைகளும் - இன்று - சிங்களப்படையினர்க்கு சிம்ம சொப்பனமாகவே மாறிவருகின்றன. ○

ஜயசிக்குறுய் களமுனை:
ஜயசிக்குறுய் முறியடிப்புச்சமர் வருடமொன்றாய் நிறைந்தநாளில் - புலிகள்சேனையின் தளபதிகளில் ஒருவரிடம் - தமிழீழமக்களின் அன்புநிறைந்த வாழ்த்துச்செய்தி கையளிக்கப்படுகிறது.

சந்திரிகா அரசாங்கத்தின் கையறுநிலை

TAMIL EELAM

புலிகளின் குரல்

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, தீவை சிங்கள அரசின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரும் அரசியல் இலக்குடன் சந்திரிகா அரசாங்கம் வரைந்த அரசியல் - இராணுவத் திட்டங்கள் அனைத்துமே ஒன்றன்பின் ஒன்றாய்த் தோல்விச்சகதிக்குள் புதைந்து வருகின்றன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு சந்திரிகா அரசாங்கம் தயாரித்த மூலோபாயத்திட்டம், "போர்மூலம் சமாதானம்" காணல் என்பதாகும்.

தமிழர் தேசியத்தின் தலைமைச் சக்தியான விடுதலைப்புலிகள் இயக்கத்தை போர்மூலம் எதிர்கொண்டு - அழித்து, தமிழினத்தின் கோடரிக்காம்புகளாக விளங்கும் தமிழ்க்குழுக்களை தமிழரின் அரசியல் தலைமைச் சக்தியாக்கி - அவர்களைக்கொண்டே தமிழினத்தின் அடிமைச்சாசனத்தை எழுதுவிப்பது சந்திரிகா அரசாங்கத்தின் தந்திரோபாயத்திட்டமாக இருந்தது.

போர் என்ற சாக்கில் தமிழினப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டு - முடிந்தளவுக்கு தமிழ்மக்களை இம்சித்து - தமிழினத்தை தண்டிப்பது பேரினவாதத்தின் ஆசை.

தனது இராணுவ - அரசியல் திட்டங்களின் உண்மையான நோக்கங்களை உலகசமூகம் அடையாளங்காணாதவாறு தடுப்பதற்காக தீர்வுயோசனைகள் - மனித உரிமைக்குழுக்கள் அமைப்பு - சிவில் நிர்வாகம் என்ற தந்திரோபாயங்களை அது உபயோகித்தது. இதன்வழியாக தமிழ்மக்களையும் மயக்கலாம் என்று அது எண்ணியது.

போர்மூலம் சமாதானம் என்ற மூலோபாயத்தை - இரண்டு வேலைத்திட்ட கோசங்களாக்கியது.

புலிகளுக்கு இராணுவத்தீர்வு - தமிழ்மக்களுக்கு அரசியல்தீர்வு என சாணக்கியத்திட்டம் வரைந்தது.

தமிழரின் தேசிய இன அபிலாசைகளை கொன்று புதைக்கக்கூடிய திட்டத்தை, அரசியல் தீர்வுப்பொதியென பெயர்சூட்டி தமிழ்மக்களின் தலையில் கட்டியடிக்க அம்மையார் முயற்சித்தார்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கென இதுவரை தயாரிக்கப்பட்ட திட்டங்களில் முற்போக்கானது - சிறந்தது என்றும் சமஸ்டி அமைப்பின் சாரங்கள் தீர்வு வரைவில் உண்டென்றும், சந்திரிகா அரசாங்கம், சர்வதேசத்திற்கு விளம்பரம் செய்தது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிசீலனை - பகிரங்க விவாதங்கள் - சிங்கள மக்களுக்கான விளக்கக் கூட்டங்கள் - வீதிநாடகங்கள் மூலம் - பிரச்சாரம் - என சந்திரிகா அரசாங்கம் அமர்க்களப்படுத்தியது.

தமிழரின் தாயகநிலத்தைப் பிரித்து, தமிழரின் தேசியதனித்துவங்களை சிதைக்கும் நாசகார நோக்கங்களைக்கொண்டிருந்த இந்த அரசியல் பொதியை புலிகள் இயக்கம் நிராகரித்திருந்தது.

எனினும், தமிழ்மக்களுக்கு அதிகளவு உரிமை வழங்கும் தீர்வுயோசனை இது வென்று, இந்த நாசகாரத்திட்டத்தையே வர்ணித்துவரும் சிங்கள தீவிரவாதசக்திகளும் சந்திரிகாவின் தீர்வுப்பொதிக்கெதிராக சன்னதம் பூண்டன.

தமிழ் இனத்தைக் குழப்பவும் - சர்வதேசமுகத்தை மயக்கவுமென சந்திரிகா அரசாங்கம் வரைந்த இந்த சாணக்கிய திட்டத்தை - இறுதியில் - சிங்கள தீவிர சக்திகளே முறியடித்தன.

சிங்களத்தின் எதிர்க்கட்சிகள் - பௌத்தசங்கங்கள் - சிங்களப்பத்திரிகை உலகம் உட்பட கணிசமானதொகையான பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோரும் இணைந்து தீர்வுப்பொதியைத் தீண்டத்தகாததாக்கினர்.

சிங்களத் தீவிரவாதசக்திகள் அஞ்சுவதுபோல தீர்வுப்பொதியில் ஒன்றுமே இல்லை என்று திருவாளர் பீரிஸ் போன்றோர் உண்மை உரைத்தபோதும், பொதிக்கு சிங்களதேசத்தில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

இதனால், தமிழர்தேசியத்தை நுட்பமானமுறையில் சிதைக்கும் யோசனைகளைக்கொண்ட சந்திரிகாவின் தீர்வுப்பொதி செத்துவிழ்ந்தது.

சந்திரிகா அரசாங்கத்தின் நவ பேரினவாதத்தை, மரபுவழிப்பேரினவாதம் தோற்கடித்து விட்டது.

இதேசமயம், சந்திரிகா அரசாங்கத்தின் போர்முயற்சியும் ஸ்தம்பிதநிலைக்கு வந்துள்ளது.

புலிகளை ஒழிப்பதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கையென அது வர்ணித்த ஜயசிக்குறுய் நடவடிக்கையின் இன்றைய இழுபறிநிலை - அதனது போர்த்திட்டம் முடமாக்கப்பட்டுவிட்டதை - பகிரங்கமாக வெளிக்காட்டியபடியுள்ளது.

மரபுவழிச்சமர்மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளை ஆக்கிரமித்து யுத்தத்தில் புலிகளை வெல்லமுடியும் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் போர்த்திட்டத்திற்கு, வன்னிச்சமர்முனையில்வைத்து புலிகள் இயக்கம் தக்கபதிலடி கொடுத்துவருகின்றது.

இதனால், யுத்தத்தைவென்று இனப்பிரச்சனையைத்தீர்த்தல் என்ற அம்மையாரின் பேரினவாதக்கனவு, இப்போது கலைந்துவருகின்றது.

சந்திரிகா அரசாங்கத்தின் போர்த்திட்டத்தை மேலும் பலவீனமாக்கத்தக்கவகையில் சிங்களத்தின் பொருண்மியநிலையும் கவலைக்கிடமாகிவருகின்றது.

போரின் பக்கவிளைவுகளால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தீவைவிட்டு வெளியேறுகின்றனர். அரசுக்கு வருமானம் ஈட்டிக்கொடுத்த பலவேறு துறைகளும் இப்போது நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தாக்குதல்களில் சிக்கி அரச சொத்துக்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. இதனால், போரைத் தொடர்வதற்குத் தேவையான பொருண்மிய வளத்தைப் பெறுவதில் அம்மையாரின் அரசாங்கம், பெரிய நெருக்கடிகளைச் சந்தித்துவிட்டது.

தமிழ்மக்களின் நிவாரணத்தை வெட்டி அதனால் கிடைக்கும் பணத்தை போர்முயற்சிக்கு திருப்பவேண்டிய பரிதாபகரமான நிலையில் அம்மையாரின் அரசாங்கமுள்ளது.

இதேவேளை, தமிழ்மக்களது - குறிப்பாக இராணுவ ஆட்சிக்குள் வசிக்கும் மக்களது மனங்களை வெல்லவென, அவர்களது இதயங்களை கொள்ளை கொள்ளவென அது பயன்படுத்திய தந்திரோபாயங்களும், இப்போது பிசுபிசுத்துவிட்டன.

இவையெல்லாம் போர்மூலம் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்கமுடியும் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் கொள்கையின் தோல்வியையே புலப்படுத்துகின்றன. இந்த கொள்கைத் தோல்வியை அம்மையாரும் உணர்ந்துகொண்டுள்ளார் என்பதை மாகாணசபைத் தேர்தல்களை நடாத்த அவர் பின்னடிப்பதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

சந்திரிகா அரசாங்கம் சந்தித்துள்ள இந்த இராணுவ- அரசியல்-பொருண்மிய இயலாமைகளை - அதன் கொள்கைத் தோல்விகளை சிங்களத்தின் எதிர்க்கட்சிகளும் கண்டறிந்து சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரமாக்கியுள்ளன. ○

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு...

ஆமை போல் மெல்ல வெளியே வந்து பார்க்கிறான்.

சற்று தொலைவில் இருந்த இன்னுமொரு நிலவறையின் வாசலில் இன்னும் புகை விலகவில்லை. அருகில் நின்ற தென்னை மரம் ஒன்று வட்டுடன் முறிந்திருந்தது. ஏனைய மரங்கள் தலையிலிகோலமாக நின்றன. ஏதோ விபரீதம் அதில் நடந்திட்டுது என அவனுக்கு விளங்கிவிடவும், அவ்விடம் நோக்கி அவன் ஓடவும் "டொக்டர் ஓடி வாங்கோ ... ஓடி வாங்கோ" எனவொரு குரல் சத்தமிடவும் சரியாக இருந்தது. விரைவாய் ஓடி அந்த நிலவறையை அடைகின்றான். உள்ளே ஒரு போராளி கழுத்தில் வலது பக்கத்தில் காயத்துடன் கிடந்து பதறித்துடிக்கிறான். இன்னுமொருவன் அதில் இருந்து இரத்தம் பீறிடாமல "பீல்ட் கொம்பிரசினால்" அழுத்திப்பிடித்திருக்கின்றான். இவனை கண்டதும் அவன், "டொக்டர் நான் காயப்பட்டிட்டன். எனக்கு வலிக்குது வேறு ஒன்றும் தெரியேல்ல, கால் கை ஒன்றையும் ஆட்ட ஏலாமல் இருக்கு, உடம்பெல்லாம் எரியிறமாதிரி இருக்கு" அவன் ஈனக் குரலில் கூறுகின்றான். துவக்கை உடனடியாக காயத்தை பரிசோதிக்கின்றான். பின் நீண்ட பலகை ஒன்றில் அவனை படுக்கவைத்து தலை ஆடாமல் இருக்க இரண்டு பக்கமும் மண் மூட்டை வைத்து அவனையும் பலகையையும் சேர்த்து கட்டுகின்றான். நெஞ்சறை பரிசோதிக்கப்பட்டு மூச்சு விடுவதில் பிரச்சனை இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின் "வாகனத்தை கொண்டுவந்து - கொண்டு போங்கோ" கூறியபடியே காயப்பட்டவனின் முகத்தைப் பார்க்கின்றான். இவனின் முகத்திலும் அவனது ஒன்று வெடிக்கிறது, காயமடைந்தது ராஜன். அவனது தலைமயிரை கோதிவிட்டவன், அதனூடு எதைக்கூற நினைந்தானோ தெரியவில்லை, மௌனமாக வெளியே வருகிறான்.

தோதல் கட்டுபை கையில் வைத்து பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அன்றைய ஞாபகங்கள் மீண்டும், மீண்டும் அலைமோதிக்கொண்டிருந்தன. ஒரு மணித்தியாலத்தின் முன் கேள்விப்பட்டான்; ராஜன் வீரச்சாவு எனும் செய்தியை. மெல்ல தோதலை சாப்பிடுகின்றான்.

அதன் ஒரு சுவையையும் நாக்கு மூளைக்கு அறிவிக்கவில்லை போலும். ஆனாலும் அதில் இருந்து அகத்துறிஞ்சப்படும் சக்தி தொடர்ந்து இவன் செய்யப் போகும் வேலைக்கு சக்தி வழங்கும். அப்பொழுது, விரைந்து வந்து ஒரு பிக்கப் நின்றது. அதில் இருந்து சில போராளிகள் இறங்கி ஆரவாரமாக சிரித்தபடியே இவர்களின் முகாமிற்கு வருகிறார்கள். வந்தவர்களில் ஒருவர் இவனிடம் வந்து, "என்ன டொக்டர் சுகமாக இருக்கிறீர்களா? என்ன உங்கட தோட்டத்துக்குள்ளேயும் யானை புகுந்திட்டுது போல" என கூறினான். அவன் மரத்தின் கீழ் வீழ்ந்து கிடக்கும் மாம்பழங்களை பார்த்தவாறு "டொக்டர் மாம்பழம் நாம் சாப்பிட்டிருக்கிறீர்களா? இம்முறை மாம்பழம் வரும் போல இல்லை, நாளைக்கு நாம் செய்வோம்" கூறியபடியே மாம்பழங்களை ஒரு இடத்தில் குவித்தான். இவனும் எதுவுமே நடவாதது போல அவனுடன் சேர்ந்து கதைத்தபடியே மாம்பழங்களைச் சேகரிக்க தொடங்குகின்றான். சூரியனும் நாளை உதிப்பதற்காக இன்று மறைகிறது. இன்றைய சோகங்களும், இன்றைய மகிழ்ச்சிகளும் நாளையும் வரும் .... ○

மனங்களை வெல்லும் தந்திரங்களும் மக்களை அடிமைகொள்ளும் சூழ்ச்சிகளும்

யாழ்குடாநாடு கைப்பற்றப்படும் போது முப்பதினாயிரம் தமிழர்கள் வரையில் கொல்லப்படும் சாத்தியமுள்ளது என்ற கணிப்புக்கு மத்தியில் - அதைச் செய்வதற்குத் தயாரான நிலையில் - யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பை சந்திரிகா அரசாங்கம் ஆரம்பித்தது.

ஆனால், புலிகள் இயக்கத்தின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளினால் - குடாநாடு - இந்த அனர்த்தத்திலிருந்து பாதுகாக்கப்பட்டது.

வலிகாமத்திற்கான மாபெரும் சமர் முடிந்தபின் - அரசின் அழைப்பிற்கமைந்து - திரும்பிச்சென்ற மக்களில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் காணாமல் போயினர்.

இந்தநிலையில் மாபெரும் வலிகாம இடப்பெயர்வு இல்லாமல், வலிகாமச்சமர் நடந்திருக்குமானால் முப்பதினாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கணிப்பு குறைந்தளவு தொகையாகவே இருந்திருக்கும்.

மக்கள் இல்லாப்பகுதிகளில் நடைபெறும் இன்றைய ஜயசிக்குறுய் மாபெரும் சமரின் தீவிரத்தன்மையை அவதானிக்கும் போது - இத்தகையதொரு சமர் வலிகாமம் போன்ற மக்கள் அடர்த்திமிக்க பிரதேசத்தில் நடந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம்.

இதைவிடநோக்குடன் - சமர் அரங்கிலிருந்து 25 கி. மீற்றர்கள் தொலைவிலிருந்த மக்கள் குடியிருப்புகள் மீது [காந்தீபுரம், வள்ளிபுனம், உடையார்கட்டு] ஒரு குண்டுத்தாக்குதலை சிங்களப் படைகள் திட்டமிட்டு நடாத்தமுடியுமானால், சமர் நடைபெறும் வேளையில் வலிகாமமக்கள் அங்கே இருந்திருந்தால் எத்தகைய அனர்த்தத்தை படையினர் ஏற்படுத்தியிருப்பர் என்பதை எளிதாக உணரலாம்.

அன்றைய பலாலிப்பெருந்தளத்திலிருந்து ஏறக்குறைய 25 - 30 கி. மீற்றர் நீள - அகலத்தில் சுமார் 5 இலட்சம் மக்களையும் கொண்டிருந்த வலிகாமத்தில் சமர்முடியும்வரை அதன் மக்களை அங்கேயே தங்கியிருக்க அனுமதித்திருந்தால் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும்.

சண்டைகள் என்ற சாட்டிலும், புலிக் களையெடுப்பு என்ற போர்வையிலும் பல்லாயிரம் தமிழர்கள் கழித்தொழிக்கப்பட்டிருப்பர். வலிகாமத்தின் இளைஞர்சக்தி காணாமல்போயிருக்கும்.

வலிகாம இடப்பெயர்வு, வலிகாமம் வாழ்மக்களின் உயிர்காப்பு நடவடிக்கையாகியதை வரலாறு சொல்லும்.

போகாரக்காரணம்காட்டி- குடாநாட்டை இரத்தபூமியாக்கி- அதை ஈழத்தமிழர்களுக்கு ஒரு படிப்பினையாக்கி- விடுதலைப்போராட்டத்தை கைவிடச்செய்விக்க சதித் திட்டம் தீட்டியிருந்த சந்திரிகா அரசாங்கம்- இப்போது அதே குடாநாட்டை ஒரு அரசியல் காட்சிப்பெட்டகமாக்கி குடாநாட்டு மக்களை மயக்கவும் - உலகசமூகத்தை ஏமாற்றவும் முயற்சிக்கின்றது.

மின்சாரம்- தொலைபேசி- நாடகம் சினிமா- கசிப்பு எனபவற்றைக் கொடுத்து, போராட்டத்தில் 'பாதிக்கப்பட்ட' மக்களது மனங்களை- இதயங்களை வெல்ல அம்மையார் வியூகம் வகுத்துள்ளார் போலுள்ளது.

இதேவேளை, போலித்தேர்தல் ஒன்றை நடாத்தி- ஜனநாயகம் திரும்பிவிட்டது என்று காட்டி, புலிகள் நடாத்தும் ஆயுதப் போராட்டத்தை மக்கள் ஆதரவற்ற பயங்கரவாதமாகச் சித்தரிக்க அம்மையார் முயற்சிக்கின்றார்.

இந்த நோக்கத்திற்காக தமிழ்க்குழுக்களையும்- தேசியப் பிரக்ஞையற்ற சில தமிழ்ப்புத்திஜீவிகள் மற்றும் ஆலகியவாதிகளையும் சந்திரிகா அரசாங்கம் விலை கொடுத்து வாங்கியுள்ளது. விடுதலைப் போராட்டத்திற்கெதிரான பிரச்சாரப்படையில் இவர்களையும் போர்வீரர்களாக்கி உலகசமூகத்தை நம்பவைக்க - அது - முயற்சிக்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தை விடுவிக்கப்பட்ட பகுதிபோலச் சித்தரிப்பதிலும்:-

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களை வென்றெடுக்கப்பட்ட மனிதர்களாகக் காட்டுவதிலும்:-

இராணுவசர்வாகத்தை சிவிலியன் நிர்வாகமாக திரித்துக்கூறுவதிலும் சந்திரிகா அரசாங்கம் சக்தியை செலவிடுகின்றது.

தென்தமிழீழத்திலும்- வன்னியிலும் இனஅழிப்புக்கடமையை இதயசுத்தியுடன் செய்யும் இராணுவத்தினரும் அவர்தம் தளபதிகளும் கடமைக்காக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டதும்,நட்புமுகமுடி அணிவித்து நடிக்கவைக்கப்படுகின்றனர். ஆட்பற்றாக்குறையால்செய்ய யாழ்ப்பாணத்திலிருந்து படையினர் ஜயசிக்குறுய் முனைக்கு அனுப்பப்படும்போது முகமூடி அகற்றப்பட்டு சுயமுகத்துடன் அனுப்பப்படுகின்றனர்.

இதயத்தை வெல்லவென்று யாழ்ப்பாணத்தில் ஏதேதோ செய்வதாகக் கூறிக்கொண்டு வன்னியிலும் - தென்தமிழீழத்திலும் தமிழரின் இதயத்தை எவைகளால் துளைத்தெறிகின்றனர்.

யாழ்வாசிகளின் மனங்களை வெல்ல முயல்வதாகச் சொல்லிக்கொண்டு கொழும்பு - மலையகம்வாழ் தமிழர்களது மன அமைதியைக் குலைத்து - பீதியை விதைத்து வருகின்றனர்.

யாழ்குடாநாட்டிற்குள்ளேயே ஒருபுறம் படைத்தனத்தையும் மறுபுறம் நட்புமுகமூடியையும் காட்டி, தமிழரின் விடுதலை உணர்வை நசுக்க இராணுவம் முயற்சிக்கின்றது. பேரினவாதத்தின் இந்த இரட்டைவேடம் ஈழத்தமிழினத்திற்கு நன்கு பரிச்சயமானதொன்றாகும்.

உண்மையில், யாழ்ப்பாண மக்களைக் கவர்வதோ! ஈழத்தமிழர்களது மனங்களை வென்றெடுப்பதோ! சந்திரிகா அரசாங்கத்தின் நோக்கமல்ல. மாறாக உலகசமூகத்தின் இதயத்தையும் - மனத்தையும் வெற்றிகொண்டு தனது பேரினவாத அரசியலைத் தொடர்வதே அம்மையாரின் திட்டம்.

இதைச் சாதிப்பதன்மூலம் தமிழினத்திற்கெதிரான போரை நீடித்து, போரில் வெற்றிகாண அம்மையார் துடிக்கின்றார். அதாவது, போர்வழி மூலம் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்கவிரும்புகின்றார். போரில் புலிகள் இயக்கத்தை வென்று தமிழினத்தை சரணடையச் செய்வித்து தமிழரின் தேசியதனித்துவத்தை அழிப்பதுதான் இந்தச் சூழ்ச்சித் திட்டத்தின் அரசியல் உலகாரும்.

காலமும் காட்சியும்

சந்திரிகா அரசாங்கம் உருவாக்கிய யாழ்நகரபிதாக்களும்- யாழ்நகரின் இராணுவ இணைப்பதிகாரிகளும் ஒரே அரசியல்பணியையே ஆற்றுகின்றனர்.

தமிழ்மக்களின் ஆயுதம்தரித்த விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதே அந்தப் பொதுப்பணியாகும். ○

அம்பகாமம் - கிளிநொச்சி சண்டைகள்

ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகளின் (F. D. L.) நீளம், இப்போது, பிரமாண்டமான அளவில் விரிவடைந்துள்ளது.

கரிப்பட்டமுறிப்பை படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகள் மாங்குளத்தின் வாசலிலேயே அமைக்கப்பட்டன.

அப்போதய மாங்குள முன்னரங்க நிலைகளின் நீளம் சுமார் நான்கு கிலோ மீற்றர்களாகும்.

புளியங்குளம் மற்றும் கனகராயன்குளம் பகுதிகளைவிட்டு புலிகள் பின்வாங்கி மாங்குளத்தைச் சூழ அரணமைத்தபோது மாங்குள முன்னரங்க நிலைகளின் நீளம் சுமார் இருபது கிலோ மீற்றர்களாக இருந்தன.

மாங்குளத்தைக் கைப்பற்றும் இலக்குடன் சண்டைகள் ஆரம்பமாகி - தீவிரமடைந்தன.

புலிகள் அமைத்துவைத்திருந்த அந்த இருபது கிலோ மீற்றர்கள் நீள முன்னரணத்தில் எங்காவது ஒரு உடைப்பை ஏற்படுத்தி மாங்குளத்திற்குள் புக படையினர் பலதடவைகள் முயன்றனர்.

எந்த ஒரு முயற்சியும் வெற்றியில் முடியவில்லை. பதிலாக, படையினர் பாரிய உயிரிழப்பையே சந்தித்தனர்.

இந்த நிலையில் நேரடிச்சண்டையைத் தவிர்த்து - புலிகளின் முன்னரங்க நிலைகளை மேவி நகர்ந்து - உடைக்க படையினர் முயன்றனர்.

படையினரின் இந்த தாக்குதல் தந்திரத்தால் முன்னரங்க நிலைகளை மேலும் அதிக தூரத்திற்கு நீட்ட வேண்டிய தவிர்க்க முடியாத தேவை புலிவீரர்களுக்கு எழுந்தது. ஜயசிக்குறுய் ஒரு வருட பூர்த்தியை அடைந்த வேளையில், மாங்குள முன்னரங்க நிலைகள் சுமார் முப்பது கிலோ மீற்றர்கள் நீளத்தைக் கொண்டிருந்தன.

ஆனால், ஒரு வருட பூர்த்தி நிறைவடைந்த இரண்டு வாரங்களின் பின்-மே, 13ம் திகதி-ஜயசிக்குறுய் முன்னரங்கின் மேற்குப் பகுதியெல்லையான விளங்கிய அம்பகாமம் பகுதியையும் மேவி படையினர் மேற்கொண்ட முயன்ற ஒரு படை நகர்வைத் தொடர்ந்து, முன்னரங்க நிலைகளை மேலும் நீட்ட வேண்டிய கட்டாயத்தை புலிகள் இயக்கம் எதிர்கொண்டது.

ஆம் மே, 28ம் திகதி.

அம்பகாமம் பகுதியில் இருந்த முன்னரங்க நிலையில் நிலைகொண்டிருந்த புலிவீரர்கள் படைநகர்வை எதிர்பார்த்து காத்திருக்க; படையினர் முன்னரங்க முடிவு நிலைகளுக்கும் அப்பால் - அதை மேவி சுற்றுப்பாதை நகர்வைச் செய்தனர்.

புலிகளும் தந்திரோபாய அமைதி காத்தனர். சில நூற்றுக் கணக்கான சிங்களப்படைகள் புலிகளின் முன்னரங்க அரண்களுக்குப் பின்னால் ஒரு சில கிலோமீற்றர்கள் உள்ளே வந்து நிலைகொண்டனர்.

மரபுவழிச் சண்டைகளான நேரடிச்சண்டைகளுக்கே நன்கு பழக்கப்பட்ட சிங்களப்படைகள் - அன்றைய தினம் - வேவுப்போர் முறைக்கு உரித்தான மரபுவழியற்ற முறையில் நகர்வைச் செய்தனர்.

சுமார் 2000, பேரைக்கொண்ட அன்றைய நடவடிக்கையணியில் ஏறக்குறைய 300 கொமாண்டோக்களைக் கொண்ட அணி உள்ளே நுழைந்து, பிரதான அணியின் வருகைக்காக காத்திருந்தது.

மரபுவழிப்படையான சிங்களப்படைக்கு இத்தகைய மரபுவழியற்ற நகர்வு அசாதாரணமாக இருக்கவில்லை.

மரபுவழியற்ற சண்டைமுறைகளில் உலகப் புகழ்பெற்ற புலிச்சேனை, உள்ளே புகுந்த சிங்களச் சிறப்பு அணியையும் - உதவ ஆயத்தமாகிக் கொண்டிருந்த பிரதான காலாட்படை அணியையும் பிரித்துவைக்கும் தந்திரோபாயத் தாக்குதலை நடாத்தி தொடர்புகளை அறுத்தது. உள்நுழைந்த அணியை முற்றுகைக்குள் வீழ்த்தியது.

கெரில்லா முறையில் உள்நுழைந்த சிங்களத்தின் சிறப்பு அணியினர் மீது புலிகள் மரபுப்போர்ப்பாணியில் எதிர்ச்சமர்த்தாக்குதலைத் தொடுத்தனர். அதேவேளை கெரில்லாத் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி உள்நுழைந்த தாக்கினர். உள்ளே வந்த பகைவணி சிதைந்து - ஓட்டமெடுத்தது. போகும் திசை தெரியாது திக்குமுக்காடியது. சிதைந்த பகைவணி விரட்டி, விரட்டி வேட்டையாடப்பட்டது.

இந்த கெரில்லாச் சண்டை இரண்டு நாட்கள் நீடித்தது. முடிவில் 60க்கும் மேற்பட்ட படையினரைக் கொன்று சுமார் 200 படையினரை காயப்படுத்தியிருந்தனர் புலிவீரர்கள், பகைவனின் முயற்சியை முறியடித்ததுடன் - காட்டுச் சண்டையில் பகைவனுக்கு ஒரு பாடம் படிப்பித்தனர்.

பின்வாங்கும் வந்த படையினரை உற்சாகப்படுத்தி - படை நடவடிக்கையை நடாத்திய ரத்வத்தையினதும், தளபதிகளினதும் இராணுவ ஆசைகளுக்கு புலிகள் இயக்கம் மேலும் ஒரு பதிலடி கொடுத்தது.

இந்தச் சண்டையைத் தொடர்ந்து முன்னரங்கநிலைகளை மேலும் நீட்ட வேண்டிய தேவை புலிகளுக்கு எழுந்தது. படையினர் மேவி நகர முயன்ற பகுதிகளுக்கும் முன்னரங்க நிலைகள் விஸ்தரிக்கப்பட்டன. இப்போது, மாங்குளம் சண்டையரங்கை மையமாகக் கொண்ட ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகளின் நீளம் சுமார் நாற்பது கிலோமீற்றர்களாக வளர்ந்தது.

வன்னி வீதிக்கு கிழக்கே ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து - வன்னிவீதிக்கு மேற்கேயுள்ள வவுனிக்குளம் பகுதிவரையான சுமார் நாற்பது கிலோமீற்றர் நீள முன்னரங்க நிலைகளை ஜயசிக்குறுய் சமரரங்கம் கொண்டுள்ளது.

இது காரணமாக மிகநீண்டதொரு முன்னரங்க நிலைகளைக் கொண்டவாறு மரபுச் சண்டையிலும் புதிய இராணுவப் பரிமாணத்தை தமிழ்ப் விடுதலைப்போர் சந்தித்துள்ளது.

நான்கு கிலோமீற்றர் நீள முன்னரங்குடன் ஆரம்பமான மாங்குளம் சமரரங்கு, இப்போது, நாற்பது கிலோமீற்றர்கள் நீள ஜயசிக்குறுய் முன்னரங்கமாக நீண்டு, விரிந்துள்ளது.

முன்னரங்கநிலைகளை நீட்டி - விஸ்தரிக்க புலிகளை நிர்ப்பந்தித்தால் அது அவர்களுக்கு பாதகமான இராணுவ விளைவுகளைக் கொடுக்கும் என்று சிங்களத்தரப்பு கருதியது.

அளவுக்கு மிஞ்சி முன்னரங்க நிலைகள் நீண்டு - விரிந்தால் புலிகளின் ஆள் - ஆயுத பலம் ஐதாக்கப்படும். அது புலிகளின் எதிர்ப்பு வலுவை சிதைத்துவிடும் என்று சிங்களத் தளபதிகள் நம்பினர்.

இதனால், படையினர் தாமும் பரவி நிலைகொண்டு புலிகளையும் பரப்பி-நிலைகொள்ள வைத்தனர்.

ஆனால், படைத்தரப்பு கணித்ததுபோல விளைவுகள் ஏற்படவில்லை.

எந்தளவு விரிவாகி முன்னரங்க நிலைகளை நீட்டுவதன் மூலம் புலிகளுக்கு ஆபத்தாக்குறைப் பிரச்சனையை ஏற்படுத்த விரும்பிய பகைத்தலைமையின் திட்டம், படைத்தரப்பையே ஆட்டுதலை தொலைக் வீழ்த்திவிட்டது.

முன்னரங்க நிலைகளை 'எலாஸ்டிக்' இழுப்பதுபோல இழுத்து - நீட்டி, புலிப்பலத்தை ஐதாக்கிப் பலவீனப்படுத்தலாம் என்ற திட்டமும் பகைத்தரப்பிற்கு நடைமுறைச் சாத்தியமற்ற மதிகளைவிலது. →

மே, 28 அம்பாளம் பகுதிக்கு அப்பால் ஒரு மரபுவழிப்பற்ற நகர்வை செய்து படுதோல்வி கண்ட பகைவன் - இந்த நாட்கள் கழிந்து - யூன், 4ம் திகதி கிளிநொச்சி சமர் முனையில் ஒரு மரபுவழி நகர்வைச் செய்ய முனைந்தான்.

யூன். 4 காலை 6. 30 மணி. புலிகளிடம் பறிகொடுத்த கிளிநொச்சியின் மையப்பகுதியை மீளக் கைப்பற்றும் திட்டத்துடன் படைகள் நகர்ந்தன.

பிரதான பாதையான கண்டிவீதியை ஒரு முனையாகவும் - திருநகர் பகுதியை இரண்டாவது முனையாகவும் - அருகில் உள்ள கணேசபுரம் பகுதியை மூன்றாவது முனையாகவும் கொண்டு கவசப்படையின் உதவியுடன் பகைவன் நகர்வுச்சண்டையைத் தொடக்கியிருந்தான்.

இரண்டாவது முனையான திருநகர் சண்டைமுனை பெரியதாகவும் ஆக்ரோசமானதாகவும் இருக்கும். [illegible] - உள்நுழையும் 'புலிப்போசன்' நகர்வு முறையை படையினர் மேற்கொண்டனர்.

திருநகர் பகுதியிலிருந்த புலிகளின் முன்னரங்க நிலைகள் சிலவற்றை தாக்கி - உடைத்த படையினர் உள்ளே புகுந்தனர். சில நூறு மீற்றர்கள் தூரம் உட்புகுந்த படையினர் நிலைகொள்ள முயன்றபோது சண்டைகள் கடுமையடைந்தன.

இந்த நகர்விற்காக கிளிநொச்சிக்குப் பரிச்சயமான படையணிகளையே பகைத்தளம் பயன்படுத்தியது.

முன்னர் கிளிநொச்சியின் மையப்பகுதி புலிகளால் கைப்பற்றப்பட்டபோது அந்தப் படைமுகாமில் நிலைகொண்டிருந்த படையணிகளைக் கூட இந்த நகர்விற்கு படைத்தலைமை பயன்படுத்தியது.

"ஒரு வகையில் ஒரு பழிவாங்கல் அல்லது ஒரு இராணுவச் சவாலாகவே இந்த நகர்வை படைத்தலைமை கருதியது.

இந்த 'புலிப்போசன்' நகர்விற்காக 5வது கஜபாகு படைப்பிரிவையும் - 7வது இலகுகாலாட் படைப்பிரிவையும் - 1வது [illegible] அணியையும் படைத்தலைமை பயன்படுத்தியது.

இதில் 5வது கஜபாகு அணியும் - 7வது காலாட்படையும் முன்னர் கிளிநொச்சியில் நிலைகொண்டிருந்தன.

முன்னைய கிளிநொச்சிப் படைத்தளத்தின் முன்னரங்க நிலைகளை 5வது கஜபாகு அணியே காவல் செய்திருந்தது. இது ஒரு இரத்த வெறி கொண்ட கொலையணி.

'சத்ஜய' நடவடிக்கையைத் தொடர்ந்து வந்த அனைய நாட்களில் தமது வீடுகளைப் பார்வையிடவும் தோட்டங்களில் கட்டப்பட்ட உணவுப்பொருட்களை எடுத்து விற்றும் பிழைக்கவும் சென்ற எமது மக்கள், முன்னரங்க நிலைகளிலிருந்து மறைந்திருந்து ரோந்து செய்த இந்த கொலைகார அணியிடம் அகப்பட்டு துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

[illegible] 100க்கும் சற்று அதிகமானோர் இந்தக் கொலைகாரப் படையின் கைகளில் சிக்குண்டு பலியானார்கள்.

இந்தக் கொலைப்படையான 5வது கஜபாகு படையணியைச் சேர்ந்த படையினரே - புலிகளின் திருநகர்ப்பகுதி முன்னரங்க நிலைகளை உடைத்து உட்புகுந்து மாட்டியவர்களாகும்.

இவை கொல்ல வந்த கொலை அணி மீது புலிகளின் பீரங்கிப் படையணி சரமாரியான குண்டுமழை பொழிந்து பகைவனைச் சிதைத்தது. சிதைந்த செங்களத்து அணியை - புலிகளின் தாக்குதலணிகள் - வளைத்துத் தாக்கி பெருநாசத்தை ஏற்படுத்தின.

காலை 6. 30 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை நடந்த இந்த கடும் சண்டையில் 200 படையினர் வரை பலியாகினர். 400க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். சுமார் 200 துப்பாக்கிகளை புலிவீரர்கள் கைப்பற்றியிருந்தனர்.

உள்நுழைந்த கொலைகார 5வது கஜபாகு படைப்பிரிவின் 50 சடலங்களை சேர்த்தெடுத்த புலிவீரர்கள், அவற்றை ஐ. சி. ஆர். சி. ஊடாக அரசுக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சில கஜபாகுச் சடலங்கள் முன்னரங்கப்பகுதியில் சிதைந்து கிடந்தன.

சுமார் 10.00 மணிநேரம் தொடர்ந்து நடந்த இந்த வீரமிகு எதிர்த்தாக்குதலில் 42 புலிவீரர்கள் வீரச்சாவடைந்திருந்தனர்.

சிங்களப்படைக்கு பாரிய உயிர்ச்சேதத்தைக் கொடுத்த இப்பெரும் சண்டை முடிந்து சரியாக நான்காம் நாள் (08.06.98) மீண்டும் கிளி-பரந்தன் படையினர் ஒரு நகர்வு முயற்சியை எடுத்தனர்.

இதுவும் 'புலிப்போசன்' நகர்வு முறையாக இருந்தது.

8ம் திகதி அதிகாலை 5. 30 மணிக்கு [illegible] திருநகர் முன்னரங்க நிலைகளில் சிலவற்றை தாக்கி - கைப்பற்றி கொண்டு - மீண்டும் பகைப்படை உட்புகுந்தது. இம்முறை உட்புகுந்த பகையணியில் [illegible] இடம்பெற்றிருந்தனர்.

முன்னைய நகர்வு முயற்சியின் போது புலிகளின் பகுதிகளுக்குள் உட்புகுந்திருந்தாலும் அங்கே நிலைகொள்ள முன்னர் அழிக்கப்பட்ட 5வது கஜபாகு அணியைப் போலல்லாது, இம்முறை படையினர் பிடித்த இடத்தில் தொடர்ந்தும் நிலைகொள்ளும் நோக்குடன் உட்புகுந்த அணிகள் முயன்றன.

இம்முறை சண்டை அனுபவமிக்க சிங்களத்து அணிகள் புலிகளின் நிலைகளுக்குள் புகுத்தப்பட்டன.

உள்நுழைந்த பகையணியில் 6வது கெமுனு படைப்பிரிவும் - 7வது சிங்க றெஜிமெண்டும் அடங்கியிருந்தன.

நான்கு மாதங்களுக்கு முன்னர், 10. 02. 98 அன்று கிளி - பரந்தன் ஆனையிறவு தளம் மீது ஒரு பெரும் வலிந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டதை அனைவரும் அறிவர். இந்த தாக்குதல் நடவடிக்கையின் போது பரந்தன் பகுதியில் நிலைகொண்டிருந்த 6வது கெமுனு படையணியை தாக்கி அழிக்கும் சண்டையின்போது ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்புலிகள் வீரச்சாவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

புலிகளின் பகுதிக்குள் நுழைந்த அணியில் இந்த 6வது கெமுனுவும் ஒன்றாக இருந்தது. உள்நுழைந்த இந்தப் பகையணிகள் கண்டிவீதிக்கு மேற்கே டிப்போச்சந்தி வரையான பகுதியை தமதாக்கப்படுத்த முயன்றன. கிளிநொச்சி நகரின் மையப்பகுதி புலிகளால் மீட்கப்பட்ட தாக்குதலுக்கு முன்னர் - கிளிநொச்சி தளப்படையினரின் முன்னரங்க நிலைகள் டிப்போ சந்திப்பகுதியில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எப்படியேற்பட்டாவது, நுழைந்த படைகளை நிலைகொள்ள வைக்க ஆனையிறவு கட்டளைமையம் பெருமுயற்சி செய்தது.

(12ம் பக்கம் பார்க்க)

மரித்த பின்னும் நீளும் வாழ்வு

குதிரும் மலை பூப்பெய்தும் குளிர்காலம். திரும்புமிட நிசப்தம். விரும்புமிட பசுமை. இயற்கையின் தாய்மையாய் இடையிட்டு கருப்பேறும் சாரல்மழை. அதைக் குடைபிடித்துத் தடுக்காத குறும்புத்தனத்தோடு குடும்பமாய் நிமிர்ந்து நாளையும் பச்சையின் மட்டுமே இச்சை இருப்பது போல மரங்களில் மட்டுமென்றில்லாது மலைச்சரிவுப் பாறைகளும் பாசிப்பசுமையாய் பூசிக்கொண்டிருக்கும். மேலிருந்து ஒருவிசை கீழே திரும்பிப்பார்த்தால், மலையோடு கைகுலுக்கிக்கொண்டே கடலுக்கு விடைசொல்லும் மேகத்தின் விசாலம் தெரியும். புல்லுக்கும், வயலுக்கும் பசுமையில் பேதம் இருப்பது புரியும். குளிருக்குப் போர்வை தராத மலையிடம் கோபித்துக்கொண்டு தள்ளிப்போகும் அருவி வெள்ளிப்பாம்பாய் தெரியும். காற்றுக்கு வளைந்த காலநிலையைக் கண்டித்து தேகம் சிலிர்த்து வலிபெறும். சொக்கவைக்கும் வெண்மையுடன் கொக்குகள் கூசும் விசாலித்துக் குந்தியிருந்து பந்தி பரிமாறும். வெள்ளித்தட்டுக்களாய்க் குளங்கள். உரத்துப்பேச ஆளில்லாத உன்னத வனத்திலே ஒருமழைக்கும் மறுமழைக்கும் இடைப்பட்ட அந்த அமைதிதான் உலக மகா சங்கீதம். மௌனத்தின் சுருதியை மனிதருள் ரசித்தபடி மலையிலே ஏறிக்கொண்டிருந்தோம்.

ஏறிக்கொண்டிருந்தவர்களில் பூட்டும் ஒருவன். இயற்பெயர் சந்திரசேகரம் சதீஸ்குமார். வயது இருபதுகளின் பிற்பகுதி. சராசரி உயரம். சற்று வெள்ளையான முகம். அடர்த்தியான மீசை. ஆனால் பெரும்பாலும் மீசையில்லாத முள்ளுரோமம் கொண்ட முகத்துடனும் ஒட்டவெட்டிய முடியுடனுமே காட்சியளிப்பான். மட். புனித மிக்கேல் கல்லூரியில் உயர்தரம் படித்து முடித்தவன். வரைபடவியலில் திறமையான மாணவன். படிப்பை முடித்துக்கொண்டு நேரே போராட்டத்தில் இறங்கி, வலது கை மணிக்கட்டின் மேற்பகுதியை சண்டையிலே இழந்தவன். ஆனாலும் எல்லோரையும்போல பாரமான பொருட்களையும் சுமந்தபடி வழுக்கும்பாறைகளின் மேலும், மரங்களில் தொற்றியும் மலைச்சரிவில் ஏறிக்கொண்டிருந்தான்.

சரிவின் சில இடங்களில் சமதரையும் இருக்கும். மழைக்காலங்களிலே அடியே செறிந்து நிற்கும் புற்களையும் குழைகளையும் உண்ண காட்டெருமைகளும், யானைகளும் ஏறுவது வழக்கம். அத்தகைய யானையொன்று திடீரென எங்களை எதிர்கொண்டது. திரும்பவும் ஓடமுடியாது; இரு ஒரு பள்ளம். முன்னே யானை. கட்டாயம் எங்களுக்கு மேலேதான் விழப்போகிறது. செய்வதறியாது திகைத்து நின்றவேளை, மனித உடல் வாசனையை நுகர்ந்த யானை திடுக்கிட்டுத் திரும்பி ஓட்டம் போட்டவாறே ஓடியது. எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

''இந்த யானை விரண்டுபோய் எங்களை நோக்கி ஓடி வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?'' ''இப்ப யானை செய்ததை நாங்க செய்திருப்போம்.'' இந்தநகைச்சுவையை மற்றவர்கள் புரிந்து கொள்ளத் தாமதித்தாலும், பூட் முந்திக்கொண்டான், '' அஹ் ஹஹ்ஹஹ் ஹா ... ஹோ ஹோ ஹோ ஓ '' என்று கெக்கலிகொட்டிக் கைதட்டிச் சிரித்தான்.

நேரேயொரு உண்மை எப்படிக் கைதட்ட முடியும்? வியப்போடு திரும்பிப் பார்த்தான். மடிந்து வைக்கப்பட்டிருந்த இடது கையின் மேல் வலது மணிக்கட்டின் மேற்பகுதி 'டாக் டாக்' என மோதிக்கொண்டிருந்தது. சிரித்த சிரிப்பில் கண்ணோரம் பனித்திருந்தது. கொஞ்சம் கூடக் கறையில்லாத தூய்மையான ஆனந்தச் சிரிப்பு. அது சாமானியனின் சந்தோசச் சிரிப்பல்ல, கவியின் உயிர்வாழ்தலுக்கான உயரிய தத்துவச்சிரிப்பு. சமர்க்களத்தில் கையிழந்தவ வென்ற சேகுவேராவின் வெற்றிச்சிரிப்பு. பார்வையில்லாமலேயே எழுத்தாக்கங்களைப் படைத்த ஹெலன் கெல்லரின் பெருமைச்சிரிப்பு. நாற்காலியில் இருந்தவாறே நாட்டை நிர்வகித்த ரூஸ்வெல்டின் சாதனைச்சிரிப்பு. காலில்லாமலே கடலோடித்திரிந்த பிட்டுவின் தன்மானச் சிரிப்பு. ஒருபுறம் மடக்கப்பட்டால் மறுபுறம் முளைத்துக்கொள்ளும் உயிரோட்டமுள்ள மனிதன் இவன். இல்லாவிட்டால் ''கேணியா'' சந்திரசிகிச்சை முடிந்து சில மாதங்களே ஆன நிலையில

போராளியின் குருதிச்சுவடுகள்

வரயின், கொள்ளுடனும் பாரமான கிட்பாக்குடனும் கட்டித்தட்ட செங்குத்தான இந்த மலைச்சரிவில் ஏறும்போது இப்படிச் சிரிக்க முடியாது. வழுக்கி விட்டாலோ பிடிப்பதற்கு ஏதும் இல்லை. இத்தனைக்கும் மூன்றுபொருமுறை ஏறுவதற்கு மிகவும் சிரமமான மலைகள் ஒன்றின்மேல் கயிறு வீசி, அதைப்பிடித்துக்கொண்டு ஏறி, இடுப்பிலே சேர்த்துக்கட்டியிருந்த பெயின்ட் மற்றும் பிறஸினால் அந்தக்கல்லின் சாய்வான இடத்தினில் பெயர்களை எழுதிவிட்டு இறங்கும்போது இடுப்பில் அடிபட விழுந்த அனுபவமும் உண்டு. இருந்தாலும் விடாப்பிடியாக ''கல்லுகூடைப் பெயரெல்லாம் எழுதியிருக்கிறேன், ஏலுமென்றால் ஏறிப்பாருங்கள்'' என்று சவால் விடும்போது முகத்தில் பெருமிதமே இருக்கும். ஊற்றங்கரைக் கோவில் இணைந்திலே இருவகை கல்லவர்களை உட்கார வைத்து ஒருவகையால் தண்ணீர்ஊற்றித் தலையிலே வார்த்துவிடும்போது, தன்னம்பிக்கையும் தாய்மையும் தெரியும். சவால்களைத் தேடிச்செல்வது இவனது பிறவிக்குணம். வெட்ட வெட்ட முளைவிடும் அறுகுபோல அழிக்கமுடியாத மனிதர்களில் இவனும் ஒருவன். இவனிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியது அதிகம் என்று தோன்றியது.

துப்பாக்கிபோல் கருவடிக் அவனுக்கு அபார ஆசை. எல்லாவகையான ஆயுதங்களையும் கட்டுப்பார்க்கவேண்டும் என்று ஒரு வெறி. கனரக ஆயுதங்கள் திருத்தப்படும்போது பரீட்சார்த்த சூடுகளைப் பொழியும் வேலைக்கு முந்தி நிற்பான். பாரமான அந்தத்துப்பாக்கிகளை இடுப்போடு சேர்த்தணைத்து '' டட டட '' வென்று சுட்டுத்தள்ளும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால் முகத்தில் ஒரு அசாதாரண திருப்தியைக் காணலாம். கனரகத்துப்பாக்கியாளர்களால் குறியைச் சுடமுடியவில்லை என்றால் ''பூட்டை அழைக்கவா?'' என்று சிறப்புத்தளபதியவர்கள் தாரீக எச்சரிக்கை விடுக்கும் அளவிற்கு சராசரிக்கும் மேலான குறியாளனாக இருந்தான். பிறரக வரம்புகளை இடது பக்கம்

- இராசமைந்தன் -

அணைத்துக்கொண்டு மொட்டையான வலதுகையை மகிலின் முட்டுக் கொடுத்தபடி குருவிகளையும், கொக்குகளையும் சாதாரணமாக வீழ்த்துவான். சந்தர்ப்பத்தில் பன்றி, மான் போன்ற வேட்டை விலங்குகளையும் வீழ்த்தியதுண்டு. வலதுகைக்கு 'பாட்டாவை' முட்டுவைத்தபடி 'பூசப்' போட்டிக்குழுட்களை அழைக்கும் குறும்பும் உண்டு. குறுகிய காலத்திலேயே இடது கையால் பழகிய எழுத்துக்கள் அழகாகவும் உறுப்பமைவுடனும் இருக்கும். கையை இழந்ததை ஒரு பின்னடைவாக அவன் கருதியதில்லை. சவாலாகவே எடுத்துக் கொண்டான். தனக்குமுன்னே நின்ற தடைக்கல்லைப் படிக்கல்லாகச் செதுக்குவதில் வெற்றியும் கண்டான்.

இயக்க ஒழுக்க விதிகள் எந்தத்தருணத்திலும் மீறப்படக்கூடாது என்பதில் மிகவும் அவதானமுள்ளவன். சலுகைகளையும் எதிர்பார்ப்பதில்லை. இராணுவ நெருக்குதல்கள் மிகுந்த 94ம் ஆண்டின் பிற்பகுதியில் குடும்பிமலைக் காடுகளுக்குள்ளே இருந்த எமது பாசறைகளில் உரத்துக்கதைப்பதும் சிரிப்பதும் தடைசெய்யப்பட்ட விவகாரங்கள். மருந்தும், உணவும் போன்றவை ஒன்றாகவே இருந்ததனால் இருப்பிடத்தைக் காட்டித் தரக்கூடிய சகல செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டிருந்தன. பட்டினி கிடந்தாலும் பக்கத்திலுள்ளவரும் மானைச் சுடமுடியாது. பெரும்பாலான பகற்பொழுதுகள் பொலித்தீன் கொட்டிலின்கீழ் சோர்வாகவே கழியவேண்டும். ஆனால் பூட்டைச்சுற்றி எப்போதுமே ஒரு உற்சாகக்கூட்டம் இருக்கும். வெட்டப்பட்ட தடி போன்ற அவனது கையின் முனையை சில குறும்புக்காரர்கள் முகர்ந்து பார்த்துவிட்டு '' ஆமாம் அப்படித்தான் '' என்பதுபோல தலையை ஆட்டுவார்கள். அவர்களின் முகங்கள் அப்பாவிகள் போலிருந்தாலும் கொடுப்பிற்குள் சிரிப்பிருக்கும். அவர்களிடையே உண்மையான அப்பாவியும் ஒருவர் இருப்பார். என்ன விடயம் என்று அவர் கேட்டால் அருகில் இருப்பவர் முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொண்டு ''கொஞ்ச நாட்களாக பூட் அண்ணையின் கையில் சந்தனம்போல மணம் வீசுகிறது'' என்பார். அந்த அப்பாவியும் ஆர்வம் பொங்க பூட்டின் கையை முகர்ந்து பார்ப்பார். எலும்பு துருத்திய அந்தக் கை அவரது மூக்கில் '' நச் '' சென்று இடிக்கும். இடி சிறியதென்றாலும் வாங்கிய இடம் மூக்கு என்பதாய் கண்ணிலே வெள்ளி பறக்க மன்னாந்துவிடுவார் அப்பாவி. எல்லோரும் அடக்கிக்கொண்டு சிரிக்க, அம்பிலியர் என்று பெயரெடுத்த ரதன் (பிரபல மின்னணுவியல் வல்லுனன், சமரக்கலைஞன், சிறந்த சண்டைக்காரன், அணித்தலைவன், இப்போது மேஜர் ரதன்) ஹெஹ் ஹெஹ் ஹே ஏ ஏ என்று தன் தனித்துவமான மூக்குச் சிரிப்பைக் கொட்ட, சிரித்தவர்கள் குந்தவும் என்று பொறுப்பாளரின் குரல் வரும். தான் சிரிக்காவிட்டாலும் சிரிப்பின் காரணம் தான் என்பதால் பூட்டும் குந்துவான். இதற்குள் இடிபட்டவர் சமாதானமாகி இன்னுமோர் அப்பாவியைக் கொண்டுவரப் போய்விடுவார். தண்டனைச் சாத்தியங்கள் நிறைய இருந்தபோதும் இது போன்ற சௌன்முறைச் சிரிப்புகளுக்காக பூட்டைச் சுற்றியிருக்கும் கூட்டம் குறைவதில்லை.

நகைச்சுவைக்கு அவன் நாவுதான் விளைபூமி. இருப்பு நிச்சயமல்ல என்ற ஏக்கத்தின் இடைவெளிகளைச் சிரிப்பும் சிந்தனையும் கொண்டு நிரப்புவான். அழுகை அவன் அகராதியில இல்லையென்றாலும், இரக்கம் அவன் இயல்புகளில் ஒன்று. ஒழுக்கம் வழுக்கத் தொடங்கும் இடங்களில் தண்டிப்பதற்கும் அவன் தயங்குவதில்லை. கடமைகள் மீறப்படுவதைக் கடுகளவும் அவன் மன்னித்ததில்லை. உரையாடலை எடைபோட்டு உள்ளத்தைப் புரிந்துகொள்வான் கண்ணுக்குள் பார்வைவிட்டுக் கற்பனையைக் கிரகிப்பான். உழைப்பும் உண்மையும் அவனது நம்பிக்கைக்குரிய ஆயுதங்கள். தவறுகளை எப்போதும் தப்பாமல் ஏற்றுக்கொள்வான். பயிலுனர்களைக் கூடப் பயமின்றி நடத்துக்கொள்வான். நேசமும் கோபமும் அவனது நிலையான கையிருப்பு. துணிச்சலை அவன் துவியில் ஆடும் போதே தேடிவைத்திருந்திருக்கவேண்டும். அறிவு அவனோடிருப்பதனாய்ப் பெருமைப்படவேண்டும். அவனது ஆன்மா சுயம்பானது. அதிலே களையில்லை, கசடில்லை. அதனால் அவன் கருத்துக்களின் வீரியம் கதிரொளியைப் போன்றிருந்தது.

எங்கள் பிராந்தியத்தின் எதிர் முகாம்களுக்கெல்லாம் அவன் தான் தாரீகப் பொறுப்பாளன். எந்தெந்த அணிகளுக்கு எப்போது லீவு? இப்போது போய் வந்தால் மறுபடி எப்போது? எவனுக்குத்தெரியாவிட்டாலும் இவனுக்குத்தெரியும். குவளைப்பு தொடக்கம் குடும்பம் சண்டைவரை அத்தனை விவகாரங்களும் அத்துப்படி இவனுக்கு. விளையாட்டோ, விருந்தோ வேறு கைக்கூட்டமோ, களியாட்டமோ, பயணமோ அனைத்தும் அறிவான். இவனது அனுமானங்கள் செயலைப்போது வெகுமானங்கள் ஆனே. கொட்டில் கட்டிக்குடியிருக்க விரும்பினால் எதிரியின் வட்டில் பயமிலே கையைவைக்கவேண்டும்

(12ஆம் பக்கம் பார்க்க)

கரும்புலிகள்

"கரும்புலிகள்" என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்தி மிக்கதொரு சொற்பதமாகி விட்டது.

கரும்புலித் தாக்குதலை நடாத்தும் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக்கரும்புலிகள் யார்?

இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஈடுஇணையற்ற இவர்களது சுகமும், பல ஓர்மமும் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளாவது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகி விட்டன.

இன்று, உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க விழையும் மக்களை மிருகத்தனமாக அடக்க, ஒடுக்க முனைகின்றனர்.

இவர்களிடம் ஆள் - ஆயுத பலம் உண்டு. ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில்நுட்ப வலுவுண்டு. இவற்றைத் தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலமிழக்கச் செய்து, தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றன.

இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு ஆள் - ஆயுத - தொழில்நுட்பத் திறன்களை போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்டத்திறன்களில் இருந்து மிக உச்சப்பயன்களைப் பெற்றாலொழிய, போராட்டச்சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

எனவே, ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுக்கச்செய்யும் அளவுக்கு பல்வேறு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச்சக்கரம் நகர்த்தப்பட வேண்டும். இந்தப் போர்வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதலாகும்.

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பாரியதொரு இலக்கை அழிக்கக் கூடிய ஒரு படையணி ஒன்றை அமைக்கும் யோசனையை, தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டிருந்தார்.

அந்த எண்ணக்கருவைச் செயற்படுத்தக் கூடிய ஆற்றலை புலி வீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக்கொண்டு வந்தார்.

1981 ஆம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் சிங்கள இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு கொழும்பில் வைக்கப்பட்டிருந்த பொழுது, தற்கொலைப்படையணி ஒன்றிற்குத் தலைமை தாங்கிச் சென்று அவர்களை மீட்டுவர பிரபாகரன் முயற்சித்தார். ஆனால் அது பல்வேறு காரணிகளால் தவிர்க்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப் படைகள் வெற்றிக்களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக் கூடியது. சிறிலங்கா அரசும், புலிகளை அழித்துவிடலாம் என இறுமாப்புடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதே சமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாண பகுதிகளுக்குச் சென்றதுடன்; அந்தக் கொடூர நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக் கூடிய சூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடாத்த தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார். அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து, அம் முகாமைச் சின்னாபின்னமாக்கியது.

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் திகிலடையச் செய்த அந்த முதலாவது கரும்புலித்தாக்குதலை, கரும்புலி கப்டன் மில்லர் செய்து முடித்தான்.

- எல்லாளன் -

அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளோம். அதில் பல கரும்புலிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப்புலி வீரனும், வீராங்கனையும் சாவைச்சந்திக்க தயாரான நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால், தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும்போது கூட திரும்பிவருவேன் என்ற நம்பிக்கையுடன்தான் ஒவ்வொரு புலிவீரனும் செல்கிறான். வேளைகளில் அங்கே அவன் சாவைச் சந்திக்கலாம். அல்லது திரும்பி வரலாம்.

ஆனால், கரும்புலிகளின் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்களின் முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்து கொண்டுவிடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகிறேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டுதான், கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கின்றார்கள்.

இராணுவ முகாமிற்குள் இருக்கும் பலநூறு எதிரிகளின் அரண்களிலிருந்து முழங்கிக்கொண்டிருக்கும் துப்பாக்கிகளைக் கருத்திலெடுக்காது, உடைந்து நொருங்கிப்போய்க் கிடக்கும் பாதை வழியே, சிரமத்துடன் நிதானமாக வெடிமருந்து வண்டியை ஓட்டிச்சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்துக்குள் நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்திசாதுரியமாக மீறி, வெடிமருந்துப்படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் கண்டதன்பாக, ஒருமுறை கப்பலைச் சுற்றிவந்து, குறித்த இலக்கின் மீதுமோத, வெடிமருந்துப்படகுடன் சேர்ந்து வெடித்துச்சிதற, ஒரு மனித மனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக்கொள்ளத் தயாரான பயோதிடம் தேவை. தனது இறுதிநேரத்திலும் கூட பதறாமல், உறுதியுடன், குறிப்பிட்ட எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ தன்னை அழித்துக்கொள்ள முனையும் தற்கொலைமுயற்சியைப் போலல்ல இது. அல்லது எதிரியின் கண்ணோட்டத்திலான கொடூரம் மிக்கதும் மானிடமாக இல்லாததுமான ஒரு பூதமல்ல இது. அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இனத்தின் சக்திக்கு உந்துகோலாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில்நுட்பத்தாலும் தடுக்கமுடியாததும், உலகின் எந்த அரச பயங்கரவாதத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீரவுணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல, எமது சமுதாய எண்ணவோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப்போகும் சக்திகொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக் கொள்ளும்போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளி விடுவதுடன், வீரமிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட தமிழ்ச் சமுகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டிவிடுகின்றது.

தேசபக்தியையும், வீரவுணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் கரும்புலித்தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும் போது, தன்னைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அளவுவலையாக கரும்புலித்தாக்குதலுக்கு நாம் தயாராகும் இந்தக் தியாகச் செயலை, உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

களம் புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரசாதனைகள், சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு கிலியை உண்டுபண்ணும் அதே சமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத்தாக்கம், தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

படுகொலைத் தீ - மீண்டெரிந்த கிராமம்

ஒவ்வொரு நாளையும் இரத்தத்தில் மூழ்காமல் வாழ்ந்து விட வேண்டும் என்ற ஆவலாதிப்பு, தமிழர் கிராமங்களுக்கேயுரிய ஒரு அவலம். ஆனால், இந்த அவலாதிப்பிற்குள் இருக்கின்ற அற்புத முரண் என்னவெனில்,

“மறைகின்ற சூரியன்! இரத்தம் சிந்துவதால்தான் / மறுநாளும் வாழ்கிறது” என்ற ஒரு தமிழகக் கவிஞரின் கவிதைவரிகள் பேசுவதைப் போல, இரத்தம் சிந்துவதால் தான் இந்தக் கிராமங்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

கிராமங்களின் பிள்ளைகள் விடுதலைச் சமர்களில் சிந்துகின்ற குருதி. படுகொலைகள் பிளந்த கிராமங்களின் கையாலாகாத குடியானவர்கள் பெருக்குகின்ற குருதி. இரண்டுமே, ஒரு இனத்தின் மிகச் சரியான அர்த்தத்தோடு கூடிய வாழ்வுத் தேடலுக்காக, தனிமனித வாழ்வுகளைத் தொலைப்பதுதான்.

படுகொலைகள் தமிழ்க் கிராமங்களுக்குப் புதிதான ஒன்றல்ல. சிங்கள இனவெறியர்களின் படுகொலை உத்திகள் பரீட்சிக்கப்படுவது தமிழ்க்கிராமங்களின் மீதுதான். தென் தமிழீழத்தின் பல கிராமங்கள் இன்னும் குருதி பெருக்கித்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. சில தமிழ்க் கிராமங்களின் அத்தனை குடியானவர் களிடத்திலும் இரத்தமயமான ஒரு கொடூரத்தின் கவடு உறைந்து போயிருக்கும்.

இப்பொழுது, உதிரிப் படுகொலைகள் மலிந்திருக்கும் யாழ்க்குடாநாட்டில்- முன்னர் பல கிராமங்கள் சிங்கள வான்படையின் படுகொலைப் பீடங்களாக்கப் பட்டிருந்தன. நவாலி தேவாலயப் படுகொலை, நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை, இரண்டும் இனவெறியின் உச்சவெளிப்பாடுகள்.

படுகொலைகள் செய்தே ஒரு இனத்தை அழிக்க நினைக்கும் சிங்கள அரசின், நீளும் கிராமப் படுகொலைகளின் பட்டியலில் புதிதாய்ச் சேர்ந்திருப்பது வன்னிப் பெருநிலத்தின் சுதந்திரபுரம் கிராமம்.

சிங்களச்சேனை, ஒரு புதிய படுகொலைப் பாணி ஒன்றை சுதந்திரபுரம் கிராமத்தின் மீது வெள்ளோட்டம் நடத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் முகாம் இருக்கின்ற கிராமம் ஒன்றைத் தெரிவுசெய்து, முகாமைத் தாக்குகின்ற போர்வையில் முழுக்கிராமத்தின் மீதும் மூர்க்கமான விமானத் தாக்குதலை நிகழ்த்துவது. விமானக் குண்டுகள் தவறவிட்ட கிராமத்தின் ஜீவன்களை எறிகணைகள் ஏவி எடுப்பது. இந்தப் புதிய படுகொலைப் பாணிக்கு சுதந்திரபுரம் கிராமம் முதற்பலியாகியிருக்கிறது.

சுதந்திரபுரம் ஒரு சின்னஞ் சிறு கிராமம்.

சுதந்திரபுரம் கிராமத்தை ஒரு அழகிய தென்னைவனம் என்றே சொல்ல வேண்டும். தென்னந் தோட்டங்கள்தான் அந்தக் கிராமத்தின் முதல் அடையாளம்.

அமைதியான அந்தக் கிராமம், அன்று நாளையும் (10.06.1998) இரத்தத்தில் மூழ்கிவிடாமல் கழித்து விட வேண்டும் என்ற குறுகுறுப்போடு- விநாடி முள்ளின் கறுகறுப்போடு வாழ்ந்துகொண்டிருந்தது.

வெள்ளொளி தெறிக்க சுதந்திரபுரம் கிராமம் இருந்தது.

எட்டு, எட்டாக மூன்று தடவைகள் கிபீர் விமானங்கள் அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தின் மீது குண்டுகளை வீசின. அனைத்தும் பாரிய குண்டுகள். நிலத்திற்குள் புதைந்து வெடிப்பவை, நிலத்திற்கும் சமீபமாக வரும்போது வெடிப்பவை என விதம் விதமான குண்டுகள் சுதந்திரபுரம் கிராமத்தைத் துவைத்தெடுத்தன.

தென்னைவனம் பற்றியெரிந்தது. தென்னைகள் முறிந்து சரிந்தன. ராட்சத மாமரங்கள் வேரோடு பிடுங்குண்டு வீழ்ந்தன.

ஒரு பையில் / நான்கு நூலில் / உயிரான விக்கிரகங்கள்.
ஒரு பொழுதில் / இரண்டு எறிகணைகள் / உயிர்களைந்த சக்கைகள்.

வரைபடத்தில சுதந்திரபுரம் கிராமத்தைக் குறிக்கும் புள்ளியை உள்வாங்கிக்கொண்ட கொடூரத்தின் நிழல, அந்தக்கிராமத்தின் மீது கவிந்து கொள்ள- அலைந்து கொண்டிருந்தது.

விமானங்களின் காலன்யொலி எல்லாக் கிராமங்களையும் ஒரு கணம் ஸ்தம்பிக்க வைத்தாலும், மறு கணம் இயல்பாகி இயங்கத்தொடங்கின.

இயல்பாகினாலும், எங்கே? எங்கே? என்ற அந்தரிப்பு எல்லோருக்குள்ளும்.

எங்கே? என்ற கேள்வியின் விடை வெடித்துச் சிதறியது.

புவனத்துக்கும் இந்தக்கதியென்றால் மனிதர்களுக்கு—?

விசைமிகு இரும்புச் சிதறல்கள் உழுத மனித தேகங்கள், உயிர் தயரிக் கோரமாய்க் கிடந்தன.

தோல் கிழிந்து பெருகும் குருதியோடு உயிர்கள் மிதந்துகொண்டிருந்தன.

கந்தகப்புகை படிந்த எஞ்சிய மனிதர்களின் பேதலித்த புத்தி, அவர்களைப் பேய்விரட்டு விரட்டிற்று. உயிரிழந்தவர்களையும், உடலகிழிந்தவர்களையும் தவிர மற்ற →

எல்லோரும் ஓடினார்கள்; எங்கே என்றில்லாமல்.

அதிர்ச்சியில் உறைந்து கிடந்த அந்தக் கிராமத்தின் சட்டைக்கொலரைப் பிடித்துலுக்கின, அடுத்து நிகழ்ந்த அடுக்கடுக்கான எறிகணை வெடிப்புகள்.

மரமேறி விழுந்த கிராமத்தை மாடேறி மிதித்தது.

கொடூரம் விளைத்த விமானங்கள் கலைந்து மறுபொழுது, சுதந்திரபுரமும் அதன் அயற்கிராமங்களான உடையார்கட்டு, வள்ளிபுனம், மூன்றும் எறிகணைகளின் மேய்ச்சல் நிலமாகின.

சுதந்திரபுரத்திற்குத் தெற்கே சுமார் 20 கிலோமீற்றர்கள் தொலைவில் இருக்கும் கிளிப்பட்டமுறிப்பு ஜயசிக்குறுய் படைத்தளத்திலிருந்தும், சுதந்திரபுரத்திற்கு மேற்கே சுமார் 25 கிலோமீற்றர்கள் தொலைவில் இருக்கும் பரந்தன், ஆனையிறவு படைத்தளங்களிலிருந்தும் 130 மில்லி மீற்றர் நெடுந்தூரவீச்சு ஆட்டிலறி பீரங்கிகளுக்குள்ளிருந்து உருவேறிக் கிளம்பிய எறிகணைகள், மூன்று கிராமங்களின் மீதும் உருவழிந்து சிதறின. உயிரழிந்து ஒலித்தன.

குழலிலிருந்து பெருத்த வெடியோசையுடன் புறப்படும் ஒரு ஆட்டிலறி எறிகணை, புறப்பட்ட இடத்திலிருந்து தன் இலக்கை அடைய வேண்டிய தூரத்திற்கேற்ப இடையிலே விசைகூட்டி வெடிப்பொன்றை நிகழ்த்துகிறது. பின்னர் மெல்லிய கூவலுடன் சென்று இலக்கில் இடியென இறங்குகிறது.

குத்துகின்ற சத்தம் (புறப்படுகின்ற சத்தம்); இடைவானில் வெடிக்கின்ற சத்தம்; கூவுகின்ற சத்தம்; இறுதி வெடிப்பு. இந்த எறிகணைச் செயற்பாட்டில் இறுதி வெடிப்பை விட அதற்கு முன்னைய மூன்று நிகழ்வுகளும்தான் மனிதர்களை மிகவும் அவலப்படுத்துகின்றன.

"வெடிக்கப்போகிறேன்" என்று நினைவூட்டியபடி வரும் எறிகணை, எங்கேனும் ஓரிடத்தில் விழுந்து வெடிக்கும் வரை, "எங்கே? எங்கே?" என்ற கேள்வி அந்தரிப்பில் அலையும். பயத்தால் மூச்சு ஏங்கி, பரிதவித்துக் குறுகி, ஆவி நலிக்கும். எண்ணங்களில் இரத்தம் பிசுபிசுக்க நெஞ்சுக்கூடலறும். உயிர் தெறிக்கப்போகிறது — உயிர் தெறிக்கப்போகிறது —

இந்த அவஸ்தை எறிகணை தளத்திற்கும், எறிகணை இலக்கிற்கும் இடையிலுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் பொதுவானது.

எறிகணைகளின் இறுதி வெடிப்பு நிகழுமிடத்தில் ஏற்படுகின்ற உயிர்ச்சேதம், உடற்சேதம் என்பவை குறுகலானவை. இலக்கின் உயிரெல்லைக்குட்பட்டதை எல்லையாகக் கொண்டவை. ஆனால் எறிகணைகள் ஏற்படுத்துகின்ற உளச்சேதமோ பரவலானது. அதன் ஒலி நிறையும் கிராமங்களையெல்லாம் எல்லையாகக்கொண்டது.

இரண்டு திக்குகளிலும் இருந்து வந்த எறிகணைகள் மூன்று கிராமங்களின் மீதும் இறுதி வெடிப்புகளை நிகழ்த்திக்கொண்டிருந்தன.

வழித்தாண்டவத்தின் பிரசன்னத்தை மூன்று கிராமங்களின் குடியானவர்களும் உணர்ந்தார்கள்.

தங்கள் உயிர்களைக் கைகளில் ஏந்தி அந்தக் கிராமங்களின் குடியானவர்கள் எல்லோரும் பித்தர்கள் போல தெறித்தோடினார்கள். எங்கே ஓடுவது? எங்கும் எறிகணைகள் மண்ணைச் சபிக்கின்றனவே! அங்கங்கேயே மண்ணோடிழைந்து படுத்துக்கொண்டார்கள். எல்லாம் ஓய்ந்தபோது, விழுந்து படுத்த எல்லோருமே எழுந்திருக்கவில்லை.

சுதந்திரபுரம்- உடையார்கட்டு- வள்ளிபுனம்- அடர்ந்த குடிமனைகள் செறிந்த இந்தக் கிராமங்கள் மூன்றும் ஜயசிக்குறுய் படை நடவடிக்கையின் ஒரு சமராங்களானது. இருபதுக்கும் மேற்பட்ட விமானக்குண்டுகள் - இருநூறுக்கும் மேற்பட்ட எறிகணைகள் நிரவிக்கப்பட்ட அந்தச் சமராங்கின் எதிர்வினை, வெறும் மரணக்கூச்சல் மட்டும்தான். இராணுவ வெறியாட்டத்துக்கு அப்பாவி மனிதர்களின் பதில் அதுதானே!

சுதந்திரபுரம் கிராமமெங்கும் அடர்ந்து நிற்கும் தென்னைகளிலிருந்து பாளைப்பூக்கள், குரும்பைகள், இளநீர்கள், முற்றுக்காய்கள், தேங்காய்கள் என நிறையத் தவறியிருந்தன. இந்தப்பருவங்களில் அந்த ஊரின் மனிதர்களும்தான்.

சுதந்திரபுரம் கிராமத்தின் வீடுகளை, வீதிகளை, வெளிகளை, மூலைமுடுக்குகளையெல்லாம் அவலக் கதறல் நிறைத்தது.

யாரை யார் தேற்றுவது? அனேகமாக எல்லோருமே எதாவதொன்றை இழந்திருந்தார்கள். சுதந்திரபுரம் இழவுக் கிராமமானது.

விமானங்களின் கூத்து, எறிகணைகளின் துள்ளல், இரண்டும் இருபதுநிமிடங்களுக்கு மேலில்லை. இருபது நிமிடங்களில் இருபத்தெட்டு மனிதர்கள் சூடாகிக்கிடந்தார்கள்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட மனிதர்கள் உறுப்புகள் துண்டிக்கப்பட்டும்– தசைகுதறுண்டும் உடலின் வளப்பழிந்து போனார்கள்.

இரத்தமயமான அந்த நாளின், அந்தக் கிராமத்தின் மிகக் கொடுமையான நிகழ்வு, ஒரு குலையில் காய்த்த நான்கு குரும்பைகளின் கோரச்சாவுதான்.

மிகவும் வறிய குடும்பம் அது.

அந்தப் பெற்றோருக்கு பொருட்செல்வம்தான் இல்லையே தவிர, இந்து பிள்ளைச் செல்வங்களை இறைவன் கொடுத்திருந்தான்.

பெற்றோர் வேலைக்குச் சென்றுவிட, பிள்ளைகள் முற்றத்தில மணல் விளையாட்டில மூழ்கியிருந்தார்கள்.

விமானங்களின் வருகை, இந்து குஞ்சுகளையும் முற்றத்தில நின்ற சிறிய மாமரநிழலில பதுங்க வைத்தன.

விமானங்கள் வீசிய பாசக்கயிற்றில் அந்தக் குஞ்சுகள் சிக்கவில்லை. தப்பித்துக் கொண்டன. ஆனால் எறிகணைகளின பாசக்கயிறு இந்து சிசுகளின் மீதும் மிகச்சரியாக வழுந்து சுருக்கிட்டது. ஒரு சிசு வழுக்கிவிட, நான்கு உயிர்களையும் சுருட்டிக்கொண்டது.

விமானக் குண்டுகளுக்கும் எறிகணைகளுக்கும் தப்பிப்பிழைத்த அந்தப் பிள்ளைகளின் பெற்றோருக்கு, பிள்ளைகள் என்னவானார்களோ என்ற கேள்வி வயிற்றைப்பிசைய, தலைதெறிக்க வீட்டுக்கு ஓடிவந்திருக்கிறார்கள்.

வீட்டை அண்மிக்கும்போதே வீட்டின் நிசப்தம் அவர்களின் மனதைக் கலவரப்படுத்தியிருக்கிறது. முற்றத்தின் வெளிப்பு புகையிலையைய- கந்தக வெடில் மூக்கிலறைய–ஏதோ அபத்தம் நேர்ந்து விட்டது என்பதை அவர்கள் ஊகித்துக் கொண்டார்கள். அந்த அபத்தம் முற்றத்தின் மூலைகளிலும், மரத்திலும் இரத்தமாய் விசிந்திருந்தது.

பிக்கிரகங்களாய் பெற்று வளர்த்த பிள்ளைகளை இறைச்சிக் குவியலாய்ப் பார்க்கக் கிடைக்கின்ற பெற்றோர்கள் எவ்வளவு பாவிகள்!

அவர்களின் ஐந்து செல்வங்களில் ஒன்றுக்கு மட்டுமே மூச்சு இருந்தது. அதற்கும் இரண்டு தொடைகளிலும் எலும்பு தெரிந்தது. மற்றவை நான்கிற்கும் மூச்சப்பை கிய்ந்து காற்று காலியாகி இருந்தது.

அந்தப் பாவப்பட்ட தம்பதிகள் வயிற்றில் சுமந்து, மடியில் சுமந்து, தோளில் சுமந்து, வளர்த்த பிள்ளைகளை– ஒன்றல்ல இரண்டல்ல நான்கு பிஞ்சுகளை– ஒரு பாடையில் ஊர் சுமந்தது.

விதலைவஅரசி இட்ட தீ, இப்படி எத்தனை பெற்ற வயிறுகளில் சிதை மூட்டியிருக்கிறது! ○

எஸ். உ. மாலீபரான்

நீதி செத்துக் கிடக்கிறது.
பொதிசுமக்கும் கழுதை பேசாமற் கிடக்கிறது.

இப்பாரும் போற்றிய 'பட்டுச்சட்டை'யின் உள்ளே
ஒட்டியுலர்ந்தது உடலொன்று.
பட்டினியிடையும் பாழும் உடலை மறைத்து,
பசித்தவிழுக்கும் பல்லின் தெளிந்து.
உலகுக்கொரு ''நாகரீகத்தை'' நற்பெற்றியுள்ளனர்.
வேருக்கு வீசுநீர் பாய்ச்சிவிட்டு
விழுதுக்கு வெளிச்சம் போட்டுள்ளனர்.
''இந்திரா காந்தி கொலைவழக்கில் எதிரிகளுக்கு மரணதண்டனை''
செம்மணிக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாம்.
எரிவைக்குப் பொறுதயணி
கொலைதிய குற்றம் குறைக்கப்பட்டுள்ளது.
எய்தவனிருக்க அம்புக்குத் தண்டனை.
எரித்தவனிருக்க நெருப்புக்குத் தண்டனை.
இருஷரத்தமீதான முறைவிருத்தும், நகர்நேர்களும்

வக்கிரமாமத்தின் வடிகாலல்ல—
ஒரு இனத்தின் மீதான அடக்குமுறை அடையாளங்கள்.
செம்மணியிற் புதைக்கது உயிரற்ற உடலங்களைமட்டுமல்ல—
எம்மினத்தின் ''வழ்வுரிமையின்'' ஆதிவேர்களையும்தான்.
நான ஆண்டவன் ஆட்படுவதன்று
அதிகாரத்தின் அனைகெளிவு.
''நாவற்குழியில் ஐநூறு உடல்களுக்குமேல்
புதைக்கப்பட்டுள்ளன''
சொன்னவன், பார்த்தவன் மட்டுமல்ல—
செய்தவனும் கூட.
சொல்லிய இடமும் கல்லுக்கடையின் தாழ்வாரத்திலல்ல.
தீர்ப்பெழுதும் ''தாய்மேவைத''யின் திருக்கோவிலில்.
தாழ்ப்பெருக்கு நீதிவழங்கிய ''நல்லவர்களே''
நாறூறு பேருக்கு நீதி எங்கே?
வாழ்வை முடக்கிதேபிய சோறுக்கான வாதாடியவர்களே!
வாழ்ந்து கொண்டிருக்கும் இருஷரத்திகளுக்காக
தீர்ப்பெழுதும் ''தேவதை'' விழாசவேழுவது எப்போது?
மனிதஉரிமை வாய்களுக்கும் பொல்லிச்சிபோட்டு
அறியாய நாடகத்தை அரங்கேற்றிவிட்டனர்.
செம்மணி வடிவெளியே!
எலும்புக்கூடுகளைச் சுமந்து உறங்கிக்கிடப்பாயாக.
செம்மணியில் உரமான ''சீவன் முத்தர்கள்''
யார் யாரென்பது யாருக்குத் தெரியும்?
அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களிக்கும்
''பெரியவர்''களுக்குத் தெரியும்
வல்லிபவாரணத்துக்கும் கூட வரிசேட்டு நின்ற
''சின்னத்தலைவர்''களுக்குத் தெரியும்.
மாநகரசபையை ஆளவந்துள்ள ''மன்னவனுக்குத்'' தெரியும்.
எல்லோரும் சேர்ந்தே எம்மை ஏமாற்றுகின்றனர்.
எண்ணமந்து போனவரைக் கருவிசமைத்தோரே!
இனி நடவூரின் வீதியில் உண்ணாவிரதம் இருக்காதீர்,
கச்சேரிக்கு முன்பாகக் கண்டன ஊர்வலம் நடத்தாதீர்.
ஐ. சி. ஆர் சீக்கு மகஜர் அனுப்பாதீர்.
கண்துடைப்பிற்கு உதவுவதாகக் கூறும் ''கட்சிக்காரர்''களைப்
பிடித்துத்
தண்டிக்க எழுவீர்.
ஜெத்துறையில் ''தர்மம்'' குழந்தவரை செல்லுவிட்டு
பிணைத்துப்போவென்று போட்டுவிட்டுப் போனதாம்.
அனுங்கிக் கொண்டு கிடக்கிறதாம் ''அதர்மம்.''
எழுவீர் எம்மக்களே!
சாவக்குழதக் காழுவேற்ற வேண்டும்.
நீதி செத்துக் கிடக்கிறது.
''பொதிசுமக்கும் கழுதை'' பேசாமற்கிடக்கிறது.
இலிச்சவாயர் தமிழரென்ற இலக்காரம் எரித்துவிட.
வெளிச்சங்களே! விதியில் இறங்குங்கள்.
முகத்தை முத்தமிழ்மகாரத்தை மூச்சுக்குழுவிட்டு,
மின்னச்சிகளைக் கூடுகளைக் கட்டி
சிலந்திருந்தன குருவிகள்.
மாலைகளற்ற ஊரெனினும் உயரஎழுந்து
சிட்டுக்குருவிகள் சிறகடித்தன.
பருந்துகளுக்குச் சிக்க முடியவில்லை.
பச்சைவயல்களிற் பாதம்பதித்து
ஓடும் வாய்க்காலில் உடல் நனைத்தன மணிப்புறாக்கள்.
கழுகுகளுக்கு மனம்பொறுக்கவில்லை.
சந்திரனின்றலும் கனவுகளோ,
இந்தர வாழ்வுக்கான எதிர்பார்ப்புகளோ,
எதுவுமின்றி இன்புற்றன பொன்வண்டுகள்.
கவலையற்ற வாழ்வே கவுமெனக் கருதியதால்
அமைதியுற்றிருந்தது குருவிகளின் ஆள்நாட்டம்.
அதுவும் இல்லாததாக்கினர்
நீலன் மதுநாயகம் கொண்ட ''தெட்டுச்''
''பெண்ணான மாயப்பசாக'' என்று
சித்தர்கள் வாய்த்ததைச் சட்டமாக விளம்பியது
எல்லாப் பெண்களையுமென்று எண்ணவேண்டாம்.
சொந்தமெரிக்க வருமொரு ''குடிகேடி'' என்று
முக்காலமுணர்ந்த முனிவர்கள்
வருங்காலமுணர்த்திய வரிகளவை.
அப்பன் ஐம்பத்தாறிலும்,
ஆத்தாள் எழுபத்தேழிலும்,
மகளாயவள் இன்றுமாக
தமிழன் குருதியில் ஜலக்கிரீடை.
கொழிபிடிக்கத் தெரியாத பூனையெல்லாம்
கோமணம் கட்டினவாம்.
அதுபோல
எங்களுக்குள்ளும் வேசோமாவிகள்.
பாதம் கழுவும் பல்லக்குகாவிகள்.
சாவுபோன சேலைக், நீலம் போடுகின்றனர்.
சோறுதாம்மைய்யே அறுத்தெறிந்து ஆடுபவர்களுக்கு
வீரவுணர்வுபற்றிய விளக்கம் வேண்டியதில்லை.
எம்தேசமே! எழுக.
காட்டிக்கொடுப்பவரின் கருத்தை தெரித்திடுக
இருளே ஆனந்தமென இருக்கதொரு கூட்டம்.

உலைக்களம்

— சியாசன்

விடிகாலை இவர்களுக்கு வேப்பு
இட்டலிக்கு ஏவல்செய்வதே இன்பம்.
''தேசியத்ரோட்டத்துக்குத் திரும்பியவர்'' என்று
கூசாமற் கூறும் குழறுபிரசங்கங்கள்.
திமிர்ந்த வாழ்வை நிறுத்து விற்றுவிட்டு
அமர்ந்து கிடக்கின்ற அற்பங்கள்.
பேய்கள் வந்து உன் வேலைக் கேட்கும்போது
தாலாவையும் விற்றுச் சப்பிடும் தலையாட்டிகளை
ஏதுசெய்யப் போகிறாய்?
நீசைவெட்டுமதிரத் தலைவிரித்தாடு தாயே.
கலை வழிந்து போகட்டும்.
இனிக் கிருஷாந்திக்காக எவரும் அழவேண்டாம்.
அவளை ஒருமுறை புதைத்தது போதும்.
தோண்டியெடுத்து மீண்டும் மீண்டும் புதைக்க வேண்டாம்.
''என்னைப் புதைத்தவரைப் புதையுங்கள்
உங்களைப் புதைக்காதிருக்கப் புறப்படுங்கள்.''
இது கிருஷாந்தியின் அசரீரி.
சோதரி பாரச்சிலுவை சுமந்து போய்விட்டாள்.
இனியேனும் எழுவீர்.
தாலமிருப்புள்ள நாறூறு உடலங்கள் மீதும்
உறுதியொன்றெடுத்து உயர்வோம்.
வீரியமுள்ளவரின் கைக்கெட்டும் தூரத்திற்தான்
சூரியனுள்ளது.
''எடுத்தகாரியம் யாவிலும் வெற்றி''
பாலையின் I. B. C. சொல்லின் அர்த்தம் புரிகிறதா?
நீ அதிரநடந்தாற் போதும்.
பூகம்பம் வாய்புதைத்துக் கொள்ளும்.
இன்னும் உறக்கமா?
உன்விழி திறக்குமா?

ஒரு நாள்

அ) 19-07-97.

பெரியமடு எனும் அக்கிராமம் தன் குழந்தைகளைப் பிரிந்து, போராளிகளை அரவணைத்த வண்ணம் விடிந்தும் விடியாத பொழுதில் ... நெடுங்கேணி வீதிக்கு வடக்கே அமைந்திருக்கிறது அது. ... குடும்பங்களையே தன்னில் கொண்டிருந்திருக்கும். அதில் இருந்த இரண்டு ... தொகுதியின் ... போராளிகளும் ... கொண்டிருக்கின்றனர் ... பிரதேசத்தின் ... மருத்துவ முகாம் அமைந்திருக்கிறது. ... பாதுகாப்பு ... அமைக்கப்பட்டிருக்கிறது ... தனித்தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

அன்று காலை வழமைக்கு மாறாக ... போராளிகள் செவியில் ... மகிழ்ச்சி ... நேற்று மாலை ... இருவர் ... வீரச்சாவடைந்துவிட்டனர் ... தென்னை மரங்களில் இருந்து ... தேவைகளை இவர்களிடமிருந்து சேகரிக்கிறார்கள். தோதல் செய்யும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ... போன்ற நாட்களில் அதிக நேரங்கள் இருக்கும் மகிழ்ச்சியான இல்லச் சூழ்நிலையை ஞாபகமூட்டுகிறது. துன்பங்களும் துயரங்களும் சூழ்ந்த நிலையில் இன்பமாய் இருக்க இவர்களிடம் கற்றுக்கொள்ளலாம். தோதல் நாளின் ... ஏதுவாக்கப்பட்டு விட்டது. நெருப்பு ... எரிகிறது. இருவர் ... தோதலை ... கொண்டிருக்கிறார்கள். ... நடைபெற்றுக் கொண்டிருக்கும் ... கேட்கின்றான். "டொக்டர் ... தோதல் ... மா?"

அப்பொழுது ஷெல் குத்தும் சத்தம் கேட்கிறது. ... மழை பொழிவதற்கான சூழ்நிலையே இது. எல்லோரும் உடனேயே பதுங்ககழிக்குள் செல்கிறார்கள். ... எத்தனை ... பிரதேசத்தில் விழுந்து வெடிக்கின்றன. "சரி இன்று முழுக்க இப்படியே கழியப் போகுது" ஒருவன் ... கூறுகிறான் ... நேரத்தில் எல்லாம் ஓய்ந்துவிட்டது. பொந்துகளை விட்டு வெளியே ... ஒவ்வொருவராக வெளிவருகின்றார்கள்.

"அடிப்பிடிக்கப் போகுது. அடிப்பிடிக்கப் போகுது" என்று கூறியபடியே ஓடிப்போன ... ஒரு ... தோதலை ... விறகுகளை வெளியால் எடுத்து நெருப்பை அணைக்கின்றான். "பாதம் சரியாகிற்று" அவன் கூற, மீண்டும் "ஷ்ஷ்... ஷ்..." ஷெல் குத்தும் சத்தம் கேட்கிறது. உடனே ... பதுங்ககழிக்குள் செல்கிறார்கள். "விடாது ஷெல் அடித்தாலும் விடாது தோதல் தின்னுவோம்" ... சொல்வது கேட்கிறது. மீண்டும் அமைதி.

வோக்கியில் அறிவித்தல் வருகிறது. "உங்களுக்குரியது வருகிறது." உடனேயே எல்லோரும் காயக்காரரை ஏற்றுக்கொள்வதற்காகத் தயாராகின்றார்கள். ... புறப்பட்ட அம்பாய் விரைந்து வந்து ... "பிரேக்" பிடித்து நின்ற ... உருமறைக்கப்பட்டிருந்த பக்கம் ... இருந்து ... தோர் இறக்கப்படுகின்றார்கள்.

காயமடைந்தோர்களின் ... சிகிச்சைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுகின்றன. அந் நிகழ்வானது முழுக்கவிட்ட ... சில ... செய்து ... இருக்கிறது. அதில் ஒரு இயந்திரத்தன்மை காணப்படுகிறது. எனினும் அது அவர்களின் ... பூரண பரிசோதனைகளை ... ஆவணங்கள் ... அவன் ... (Ring worm) ஆகியிருக்கிறது. "டே ... கட்டுப்படாமல் ... குளிசையோ அல்லது பூச்சி மருந்தோ ... தொடர்ந்து பாவிக்க வேண்டும். ... நேரத்தில் மருந்து ... வேண்டும். ... வேண்டும் ... சாத்தியமில்லை. ... ஆடைகளை அணிவதற்கு ... கொடுக்காது. ... காயம் ... கஷ்டமாக இருக்கும்". என பலவகை ... அவன் ... சிகிச்சையின் ஈடு

வேண்டும். அப்படிச் செய்தால், அவர் ... நடக்க முடியாது. எனவே சாதாரண நோ நிவாரணியுடன் (Pain killer) ... வெட்ட வேண்டியது தான். மேற்படி விடயங்களை கொண்டு உடனே அவன் செயலில் இறங்குகிறான். நோ நிவாரணி கொடுக்கப்பட்டு ... வெட்டும் ... சத்திர சிகிச்சைகளை ... நன்மை ... தெரிகிறது. ... குருதி ஏற்றுதல், ... சிகிச்சைகளை செய்து முடித்த பின்னர் "வாகனத்தில் ஏற்றுங்கோ" அவன் கூறுகின்றான். ... "டொக்டர் கொஞ்சம் பொறுக்க ஏலாதோ? இன்னும் இரண்டு பேர் வருகுதாம். சேர்த்து ஒரு வாகனத்தில் அனுப்பலாம் தானே ...!" ... வாகனங்களின் தட்டுப்பாடு, எரிபொருள் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை ஞாபகமூட்டுகின்றான் போலும். "இல்லை இதை உடனே ... மிச்சதை வந்தவுடன் பார்ப்பம்" அவன் பதில் கூற, உடனே வாகனத்தில் காயமடைந்தவர்கள் அனுப்பப்படுகின்றனர். இவன் நேரத்தை ... பார்க்கிறான். "காயமடைந்து மூன்று மணித்தியாலங்கள் கடந்து விட்டன. இந்த ... பயணிக்க ... மணித்தியாலங்கள் ... தொழுநோயாளிக்கு ... செய்வன் ... முடியும். ... வரும் காயங்களை ஏற்க, பொருட்களை தயார்படுத்தச் சொல்லுகிறான் ... இருக்கும் ... பேர் வரையில் சிகிச்சை பெறுகின்றார்கள். பத்து பேருக்கு மலேரியா, இருவருக்கு ... சாதாரண காய்ச்சல் ... ஏற்பட்டு ஒவ்வொரு ... மாதிரி ... இருக்கின்றது. மலேரியாவால் பாதிக்கப்பட்டவரில் இருவருக்கு அன்றுடன் மருந்து முடிகின்றது. ஆனால் அவர்கள் பலவீனமாக இருப்பதால் ... கட்டாய ஓய்வு எடுக்க வேண்டும். இப்படி எண்ணியபடியே ... சிகிச்சைகளை சரி பார்க்கையில், அப்பகுதிப் பொறுப்பாளர் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு இவன் அருகில் வருகிறார். "டொக்டர் காயக்காரர் மாதிரியானவர் இருக்கினமோ? ... போயிட்டுது, ... பண்ண ... காணாது" எனக் கேட்கிறார். அவருக்கு ... நிலை ... பொறுத்த வரையிலும் எவரையும் அனுப்ப முடியாது. ஆனால் ... பொறுத்தவரை மருந்து முடிந்த இருவரையும் அனுப்பலாம். என்ன செய்வது? அவன் யோசித்துக் கொண்டிருக்க அந்த இருவரும் "டொக்டர் நாங்க போறம், எங்களுக்கு மருந்து முடிந்தது தானே"? கேட்கிறார்கள். "சரி போங்கோ" என அரைமனதாய் சம்மதிக்கிறான். ... பார்த்து "கவனமாக இருக்கோணும். ... நீங்கள் தான் பொறுப்பு. பின் ... எவரும் காயப்படக் கூடாது என கட்டாயமாக ... " என இவன் கூறி ... வெளியில் வரவும், மீண்டும் ஷெல் குத்தும் சத்தங்கள் கேட்க, ... செல்கின்றார்கள். ஷெல்கள் இவர்கள் இருந்த பகுதியிலேயே சரமாரியாக விழுந்து வெடிக்கின்றன. நிலமே அதிர்கிறது. ... மரங்களில் ... சத்தம் கேட்கின்றது. வெளியில் தலை காட்ட முடியாத நிலை. சுமார் இருபது நிமிடங்களின் பின்னர் அமைதி ஏற்படுகின்றது. ... இருந்து தலை நீட்டும்

(8-ம் பக்கம் பார்க்க)



... சகபோரிக்கு ... போராளிகள் ... பரிசோதனைக்குள் ...

பட்டுக்கொண்டிருக்கிறான். தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதும் மேலதிக சிகிச்சைக்காக பின் தளங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

சிறிது நேரத்தில் மீண்டும் அறிவித்தல் வருகின்றது. "உங்களுக்குரியது இன்னும் இரண்டு வருகுது." ... இருவரும் வேகமாக இறக்கப்படுகின்றார்கள். ஒருவரின் கால் முழங்காலின் கீழ் சிதைந்து தொங்குகின்றது. ... வெளித்தள்ளப்பட்டு ... குருதியும் பெரிய அளவில் வெளியேறி இருக்க வேண்டும். மற்றவருக்கு மேல் தொடையில் காயம். காலிற்குரிய

– தூயவன் –

பிரதான நாடி சேதமடைந்திருக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே நாடியினை சத்திரசிகிச்சை மூலம் திருத்தியமைக்க வேண்டும் (Vascular surgery). குறைந்தது ஆறு மணித்தியாலங்களிற்குள் இவரை அனுப்பி வைக்க வேண்டும். ... கீழ் ... அகற்ற வேண்டி ஏற்படலாம். ஆனால் முதலாமவருக்கு சரியான முறையில் குருதிப் பெருக்கை நிறுத்தி கட்டுப்போட வேண்டும் என்றால் ... வெட்ட வேண்டும். பூரண மயக்கத்தில் தான் அதனை செய்ய

(05ம் பக்கத் தொடர்ச்சி)

அம்பகாமம்...

காட்டமான முறியடிப்புத் தாக்குதலை புலிகள் விடாது நடாத்திக்கொண்டு இருந்தனர். அதிகாலை தொடங்கிய சண்டை மதியத்தையும் தொட்டுக்கொண்டிருந்தது.

உள்நுழைந்த படைக்கான மேலதிக உதவிகளையும் பின்தொடர்ந்த படையினருடனான நிலத்தொடர்புகளையும் புலிவீரர்கள் வெற்றிகரமாக தடைசெய்து சண்டையில் மேலோங்கினர்.

புலிகளின் எதிரணித் தாக்குதல்களாலும் முறியடிப்புத்தாக்குதல்களாலும் உள்நுழைந்த படையினர் சிதைந்து சேதப்பட்டனர். இறுதியில் தமது படை நிலைகளை நோக்கி தப்பிப்பிழைக்க ஓட்டமெடுத்தனர்.

சண்டைகளில் சிக்கல்கள் ஏற்படும்போது பிடித்த நிலைகளை அல்லது நிலைகொண்ட நிலைகளைக் கைவிட்டு படைகள் பின்வாங்குவது ஒரு இராணுவ தந்திரோபாயம். ஆனால், இந்தச் சண்டையில் படையினர் செய்தது பின்வாங்கல் அல்ல. பின்வாங்கல் என்றால் அதில் ஒரு ஒழுங்குமுறை இருக்கும்.

ஒரு அணி தற்காப்புச் சண்டையில் ஈடுபட மறு அணி பின்னேறுவதும், பின்னர் பின்னேறிய அணி உதவிச்சூடுகளை வழங்க சண்டையிட்ட அணி பின்வாங்குவதும் என்று ஒரு சக்கரச் சுழற்சி போலவே இராணுவப் பின்வாங்கல் நடைபெறும். அது ஒரு திட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும். இந்தப் பின்வாங்கல் அவ்விதம் நடைபெறவில்லை. 4ம் கெமுனு தாக்குதலின் போது அழிந்துபட்ட உள்நுழைந்த படையினர் போலவே தாமும் ஒட்டுமொத்தமாக அழிக்கப்படலாம் என்றுபடையினர் பீதியடைந்தனர். புலிகள் நடாத்திய முறியடிப்புத்தாக்குதலின் வீச்சும் அவர்களை உலுக்கியது. அதேவேளை, திட்டமிட்டும் பின்வாங்கும் அளவுக்கு களநிலையும் படையினருக்கு சாதகமாக இருக்கவில்லை. ஆனையிறவு கட்டளைப்பீடத்தின் உத்தரவுகளுக்கு கட்டுப்படும் நிலைசார்ந்த சண்டையின் தன்மை இருக்கவில்லை. அத்துடன் உள்நுழைந்த படையினர்கள் சின்னாபின்னமாகின. திக்குத்திசை தெரியாது அணிகள் சிதைந்தன. இந்த நிலையில் தப்பிப்பிழைக்க ஓடியதுபோல உள்நுழைந்த படையினர் தலைதெறிக்க தமது தளம்நோக்கி திரும்பி ஓடினர்.

இந்தச் சண்டையின்போதும் 35 இராணுவச் சடலங்களை புலிகள் கைப்பற்றினர். இந்த உடலங்களில் சிதைந்த சடலங்களே அதிகமானவையாகும்.

இரண்டாம் கட்ட ஜயசிக்குறுய் சண்டைகளை படைத்தலைமை இவ்விதமான முறையிலேயே நடாத்த முனைகின்றது.

ஒரு வருட வயதை ஜயசிக்குறுய் அடைந்திலிருந்து இன்றுவரையான இரண்டு மாத காலத்திலும் (மே 13-ஜூலை 23, 98) நடந்த சண்டைகளை அவதானித்தால் சண்டையின் தீவிரத்தன்மை புலப்படும்.

இந்த இரண்டு மாதச் சண்டைகளிலும் படைத்தலைமை பலவேறுபட்ட நகர்வு உத்திகளையும் — தாக்குதல் உபாயங்களையும் கையாண்டுள்ளது.

புலிகளின் முன்னரங்கங்களை — வெற்றிகொள்வதற்கான நகர்வு முறைகளாக அது மரபுவழி நகர்வுகளையும் — மரபுவழியற்ற நகர்வுகளையும் பயன்படுத்தியது. மரபுப்போர் ஆயுதங்களை உபயோகித்தும் — சிறு ஆயுதங்களை பயன்படுத்தியும் சண்டைபோட்டது.

மே, 25ம் திகதி அம்பகாமம் தாக்குதல் மரபுவழியற்ற நகர்வாக இருந்த அதேவேளை, யூன் 4ம்-5ம் திகதிகளில் நடந்த மினிநேரி சண்டைகள் மரபுவழி நகர்வு முறைகளைக் கொண்டிருந்தன.

இந்தவகைத் தாக்குதல் முறைகளை படையினர் குறுகிய கால இடைவெளிக்குள் இரு சமர்முனைகளிலும் (மாங்குளம் - அம்பகாமம்) அடுத்தடுத்து பயன்படுத்தியது, சண்டையின் முக்கிய இராணுவ அம்சமாகும்.

எனினும், படைத்தலைமையின் இந்தப் புதிய தாக்குதல் திட்டங்களையும் — தந்திரோபாயங்களையும் வெற்றிகரமாக முறியடித்த புலிகள் இயக்கம், சமரின் போக்கை இன்றுவரை தன்வசம் வைத்திருக்கின்றது.

மினிநேரி முன்னரங்கைத் தாக்கியது போல, ஒரு நேரடித்தாக்குதலை மாங்குளம் நகரை நோக்கிட 20.6.98 அன்று படையினர் நடாத்தினர்.

கண்டி வீதியில் அமைந்துள்ள மாங்குளம் சந்தியின் முன்னரங்க நிலைகளுக்கு பாதுகாப்பாக அங்கிருந்து சில மீற்றர்கள் முன்னே அமைக்கப்பட்ட காப்பு நிலைகள் அமைந்திருந்த பகுதி மீது படையினர் ஒரு நேரடித்தாக்குதலைத் தொடுத்து இருந்தனர். இரண்டு நாட்கள் சண்டைகள் தொடர்ந்து நடந்தன. ஒருசில காப்பு நிலைகளை கைப்பற்றியதைத் தவிர சிங்களப்படைகளால் எதையும் சாதிக்க முடியவில்லை.

மாங்குளம் சந்தியின் முன்னரங்கத்தைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட காப்புநிலைகளை பாதுகாக்க நடந்த இரண்டுநாள் சண்டையில் 31 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். அதேவேளை 80 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். சுமார் 200 பேர் காயத்திற்குள்ளாகினர்.

வன்னிக்களம், உண்மையில், எல்லாவிதமான தரையமைப்பையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு விசித்திரமான போர்முனையாகவே காணப்படுகின்றது.

அடர்ந்த காடுகள் சார்ந்த இடங்களும் உண்டு — புதர்கள் கொண்ட சிறுகாடுகளும் உள்ளன.

வெறும் நிலங்களும் — வயல்பரப்புகளுமென பரந்த வெளியைக் கொண்ட தரையும் உண்டு.

வான்தாக்குதலைப் பொறுத்தவரை இலகுவான துல்லியமாகத் தாக்கக் கூடிய வாய்ப்புகளைக் கொண்ட நில அமைப்பு உண்டு.

வன்னியின் இந்த தரையமைப்பை தனக்கு சாதகமாக்கி சண்டைகளை நடாத்தக் கூடிய கருவி வளங்களை (ராங்குகள் - பீரங்கிகள் - வேவுவிமானங்கள் - கிபீர்கள்) சிங்கள அரசு வைத்திருக்கின்றது. எனினும் அதனால் சமர்முனையில் வெற்றிகளைப் பெற இயலவில்லை.

போரியல் தந்திரங்களிலும் - போர்த்திறனிலும் — ஆட்பலத்திலும் புலிகள் இயக்கம் பாரிய வளர்ச்சிகண்டு வருகின்றது என்பதையே இந்த இராணுவ பரிமாணம் புலப்படுத்துகின்றது. ○

(06ம் பக்கத் தொடர்ச்சி)

மரித்த பின்னும்...

என்ற [illegible] கொள்கை இவன் வாழ்வழியில் உதித்ததுதான். மூன்றாம் கட்டப் போரில் அது முற்றிலும் திருப்பம் ஆயிற்று. மரபியல் சார்ந்த போரியல் அறிவில் மட்டுமல்லாப் புலமை கொண்டவன். தோல்விகள் வெற்றிகளின் இடைவெளிகள் அல்ல இணைப்புப்பாலங்கள் என்று இடைக்கிடை சொல்லுவான்.

ஊர்மனைகளையும் வீடுகளையும் விட மலைகளையும், காடுகளையுமே பூட் அதிகம் நேசித்தான். தோதான மலையின் மறைவான குடில்களைப் போட்டு அந்தப் பிராந்தியத்தைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதில் தனி ப்ரியமுள்ளவன். அவ்வாறான மலைக்கோட்டை ஒன்று கட்டப்பட்டுக்கொண்டிருந்தபோது, அது அமைந்திருந்த இடம் யானைகளின் போக்குவரவுப் பாதை என்பது அறியா - தெரியாது. பணியில் எப்போதும் ஆர்வமுள்ள பூட், வெளிவேலை மட்டுமே முடிந்திருந்த கொட்டிலினுள் தன் வேலையைத் தொடங்கியிருந்தான். தலைவரினால் அப்போதுதான் முதன்முதலாக [illegible] தரப்பட்ட ஒரு புதிய கருவியும் அவனிடம் இருந்தது. மதிய உணவின் பின்னான சிறு ஓய்வில் பாயின் சற்று சரிந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தபோது ஒரு போராளி ஓடி வந்தான். இயல்பிலேயே நகைச்சுவைப் பண்புள்ளவன் அவன். "அண்ணே அண்ணே" என்று அவசரமாக அழைப்பதும், என்னவென்று கேட்டால் "இரண்டு மான்கள் ஓடி வந்து சரண்டர் பண்ணினால் எப்படி இருக்கும்" என்று அப்பாவிபோல் கேட்டு விட்டு [illegible] சிரிப்பதும் வழக்கம். எனவே அவன் பதறி ஓடி வந்ததோ, "யானை துரத்தி வருகிறது" என்று அலறியதோ நம்பப்படவில்லை. காதில் அணிந்திருந்த செட்போனையும் மீறி "தொம், தொம்" என்ற ஓசை கேட்டபோதுதான், விசயம் [illegible] வந்த கதையாக முற்றிவிட்டது தெரிந்தது. பாய்ந்து வெளியே வந்து பார்த்த போது அந்தப்பிரமாண்டமான மிருகம் கொட்டிலுக்கு மிக அருகாமையில் முன்னங்கால் இரண்டையும் தூக்கி பெருமெடுப்பில் பிளிறியது. உடனே வெளியே வந்து [illegible] மறைந்து நின்றபோது, பூட் மீண்டும் கொட்டிலுக்குள்போக எத்தனித்தான். ஓடுவதற்காகக் கையைப்பிடித்து இழுத்தபோது, "முடியாது. அந்தக்கருவி உள்ளே இருக்கிறது. அதை விட்டுவிட்டு என்னால் வரமுடியாது" என்றான். அவனை ஒருவாறாகப்பின்னே இழுத்து விட்டபின்புதான் யானையைக் கடக்க முடிந்தது. தன் பொறுப்பிலுள்ள பொருளை இழந்து தலைகுனிவதிலும், ஆபத்தை எதிர்கொள்வது நன்று என எண்ணிய அவனின் ரோச உணர்வு, அவன் உடலில் ஓடும் [illegible] இரத்தத்தின் மறைக்கமுடியாத வெளிப்பாடென்றே கருதவேண்டும்.

94ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் [illegible] பிரதேசத்தில் அலைந்துதிரிந்து புதிய இடங்களைப் பார்வையிடுவது அவனது பொழுதுபோக்கு. வரைபடங்களில் இருக்கும் புதிய இடங்களை நேரிலே போய்ப்பார்ப்பதில் ஆர்வம் அதிகம். தருணம் கிடைக்கும் போதெல்லாம் புதுப்புது இடங்களுக்குப்போய் அவ்விடத்தின் பாரம்பரியம் பற்றி அப்பகுதி முதியவர்களிடம் பேசித்தெரிந்துகொள்வது அவனுக்கு வாடிக்கை. தலைவரின் படங்களையும், வசனங்களையும் ஆர்வமாகச்சேர்ப்பான். சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்கூட சிங்களமொழி சார்ந்த அவன்கேள்விகளில் திணறியிருக்கிறார்கள். "நீங்கள் உண்மையிலேயே சிங்களவர்தான், தமிழரல்ல" என்று அவர்கள் கூறும் சம்பவங்களும் உண்டு. மேலைத்தேய, கீழைத்தேய மரக்கறிகளைப் பயிரிடுவதில் அவன் வல்லுனன்.

தேனீர் தயாரிக்கும் அடுப்பினுள்ளே இரண்டு சுள்ளிகளைச் சொருகிவிட்டு "இப்போது இந்தத் தேனீருக்கான எனது பங்களிப்பைச் செலுத்தி எனது பங்குரிமையைப் பெறுகிறேன். உழைக்காமல் தின்பவன் திருடன்" என்பான். அந்த அளவிற்கு உழைப்பில் நம்பிக்கை கொண்டிருந்தான்.

ஆனாலும், துணிச்சலாக ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்தல் இருந்ததினால், அதனையே அதிகம் விரும்பினான். கொழும்பு ரோட் கடப்பதானால் முதலாவது அணியிலேயே போக விரும்புவான். அவ்வாறான நேரடி மோதலில் மார்பிலே காயமடைந்தும் கூட ஆர்வம் குறையவில்லை. ஊருக்குள்போய் பதுங்கித் தாக்குதல் செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவான். எதிரியின் அனைத்துப் பலவீனங்களையும் அறிந்து, எப்படி எப்படி அவனை ஏமாற்றித் தொல்லைப்படுத்தலாம் என்று ஆராய்ந்து கொண்டே இருப்பான். தன் வாழ்வின் கடைசித் தருணம் வரை துப்பாக்கி ஏந்திக்கூடிய ஒரு போர்வீரனாக இருக்கவே விரும்பினான். கடைசியாக புளியங்குளத்தில் வைத்து ஜயசிக்குறுய் படை நடவடிக்கைக்கு எதிரான சமரில் வீரச்சாவடையும் போதும், தான் விரும்பியவாறே துப்பாக்கியைக் கையில் வைத்திருந்தான். கோல்சரையும் அணிந்திருந்தான்.

பூட்டைப் பற்றிய இந்த விடயங்கள் சிலருக்கு மிகையாகத் தோன்றினாலும், அவனை அறிந்தவர்கள் இதுவும் முழுமையற்றது என்றே கூறுவர். அவன் அழிந்தாலும், அழியாத அவனது தத்துவம் ஒன்றுண்டு. போரின் முடிவான சுதந்திரத்தை தமிழீழத்தின் பங்குடைய அனைவருமே அனுபவிப்போம். அவ்வாறாயின் அதற்கான எமது தேசியப் பங்களிப்பு செய்யப்பட்டு விட்டதா? நாம் உழைக்காமல் உண்ணப்போகும் திருடர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தி விட்டோமா? ○

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்